**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மயிலாடுதுறை.**

முன்னிலை : திரு.பி.சந்திரசேகர், எல்.எல்.எம்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.

திருவள்ளுவராண்டு 2048, ஹேவிளம்பி வருடம், ஆவணித் திங்கள் 28ம் நாள்.
2017ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13ம் நாள் புதன்கிழமை.

**அசல் வழக்கு எண்.265/2013**

நாச்சிமுத்து நகர் குடியிருப்போர் நலசங்கம்
சார்பாக அதன்
1. தலைவர் கார்த்திகேயன்
2. செயலர் ரபி அகம்மது ... வாதிகள்

-எதிர்-

1. பிரதான் பாபு
2. சுரேந்திரபாபு
3. சுப்ரமணியன்
4. பழனிவேல்
5. ரெங்கநாயகி
6. சந்திரா
7. செல்வகணபதி
8. சாவித்ரி
9. ஹேமமாலினி
10.முத்துக்குமார் ... பிரதிவாதிகள்

WEB COPY

( 2 முதல் 5 பிரதிவாதிகள் இந்நீதிமன்ற வ.வி.எண்.78/2014ன் 21.02.2014 நாளிட்ட உத்தரவின்பேரில் வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டு பிராது திருத்தப்பட்டுள்ளது.)

( 6 முதல் 10 பிரதிவாதிகள் இந்நீதிமன்ற வ.வி.எண்.615/2014ன் 17.12.2014 நாளிட்ட உத்தரவின்பேரில் வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டு பிராது திருத்தப்பட்டுள்ளது.)

இவ்வழக்கு என்முன்பாக 19.08.2017 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் ஆர்.சிவபுண்ணியம், எஸ்.கே.கண்ணன், வி.பாலசுப்பிரமணியன், கே.இளையராஜா அவர்களும், 1 முதல் 5

பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.ஜெகதராஜ் அவர்களும், 6 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் டி.மோகன், எம்.மனோஜ்குமார் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவண, சாட்சியங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்

**தீர்ப்புரை**

வாதிகள் அனுபவத்தில் உள்ள தாவா பொது இடத்தில் பிரதிவாதிகளும், அவர்களின் ஆட்களும் ஆக்கரமித்து எந்தவிதமான கட்டுமானத்தையோ அல்லது இடையூறோ செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும், வழக்கு செலவுத் தொகை கோரியும் தாவா.

WEB COPY

**2. வாதிகள் தாக்கல் செய்த வழக்குரையின் சுருக்கம் :**

தாவா சொத்து இந்நீதிமன்ற எல்லைக்குட்பட்ட மயிலாடுதுறை டவுன், கூறைநாடு, நாச்சிமுத்து நகரில் உள்ளது. வாதிகள் சங்கம் முறையாக மயிலாடுதுறை மாவட்ட பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு எண்.Sl.No.114/2013 சங்க விதிகளின்படி சங்கம் சார்பாக சங்கத்தின் தலைவரும், செயலரும் வழக்குத் தொடுக்க உரிமையுள்ளது. அதன்படி சங்கத்தின் தலைவரும், செயலரும் சேர்ந்து இந்த வழக்கை கொடுத்துள்ளனர். மயிலாடுதுறை டவுன், கூறைநாடு, திருமஞ்சணவீதியில் நாச்சிமுத்து நகர் அமைப்பதற்காக T.S.NO.1000/1& 2, 1002, 1003/1&2, 1004 ஆகிய நம்பர்களில் நகர் அமைக்க பிளாட்டுகள் போட்டு, தஞ்சை, திருச்சி, பிராந்திய துணை இயக்குநரிடமும், மயிலாடுதுறை நகராட்சி ஆணையரிடமும் லேஅவுட் அப்ரூவல் பெற்று நகர் அமைக்கப் பெற்றது. அந்த லேஅவுட்டில் நாச்சிமுத்து நகர் குடியிருப்போர் நலனுக்காக நகர் அமைத்துள்ள ஒரு பகுதியை பப்ளிக் பர்பசக்காக ஒதுக்கப்பட்டது. அந்த ஒதுக்கப்பட்ட சொத்துதான் தாவா சொத்தாகும். பப்ளிக் பர்பசக்காக ஒதுக்கப்பட்ட சொத்திற்கும் மேற்கே டாக்டர் சிவக்குமார் என்பவர் பிளாட் நம்பர் 19ஐ வாங்கியுள்ளார்.

அதேபோன்று ஏ.ராஜேந்திரன் என்பவர் பொது உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்ட சொத்திற்கும் மேல்புறம் உள்ள பிளாட் நம்பர் 20ஐ வாங்கியுள்ளார். பொது இடத்திற்காக ஒதுக்கப்பட்ட தாவா இடம் காலியிடமாகவே உள்ளது. பிரதிவாதி மயிலாடுதுறை டவுன், கூறைநாடு, திருமஞ்சனவீதியில் உள்ளார். அவர் நாச்சிமுத்து நகரில் எந்த பிளாட்டையும் வாங்கவில்லை. வாதிகள் நல சங்கத்தின் உறுப்பினரும் அல்ல. பிரதிவாதி 2013 அக்டோபர் மாதம் 3வது வாரத்திலிருந்து பொது உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்ட தாவா மனையில் தனக்கு சொந்தம் இருப்பது போலவும், அதில் கட்டிடம் கட்டப்போவதாகவும் கூறி வருகின்றார். பிரதிவாதிக்கு தாவா மனையில் எந்தவிதமான உரிமையும், அனுபோகமும் கிடையாது. தற்போது பிரதிவாதி தன் ஆள்பலத்தையும், பணபலத்தையும் வைத்துக் கொண்டு தாவா நாச்சிமுத்து நகர் பொது உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்ட தாவா மனைவில் கட்டிடம் கட்டப் போவதாக அக்டோபர் 2013 4வது வாரத்திலிருந்து மிரட்டி வருகிறார். அவருடைய சட்டத்திற்கு புறம்பான செயலை தடுத்து நிறுத்தவேண்டியது அவசியமாகிறது. இல்லாவிடில் பொது உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்ட தாவா இடத்திற்கு பாதிப்பு ஏற்படுவதுடன் வாதிகள் சங்க குடியிருப்போர் நலனுக்கும் பாதிப்பு ஏற்படுவதுடன் வாதிகள் சங்க குடியிருப்போர் நலனுக்கும் பாதிப்பு ஏற்படும். ஆகையினால் வாதிகள் நகர் நலத்திற்காக ஒதுக்கப்பட்ட தாவா காலி மனையில் பிரதிவாதியும் அவர் ஆட்களும் சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமித்து எந்த கட்டுமானத்தையும் செய்யக்கூடாது என அவர்கள் மேல் நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கவேண்டுமென்று இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது. வாதிகள் உரிமை, அனுபவத்தை பற்றி எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. வாதிகள் தங்கள் நலனுக்காக ஒதுக்கப்பட்ட சொத்தை பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணத்தில் வாதிகள் இந்த நிரந்தர உறுத்துக்கட்டளை வழக்கை பிரதிவாதிமேல் தொடுத்துள்ளனர். 1ம்பிரதிவாதி தன் எதிர்வழக்குரை பாரா8ல் தாவா பொதுமனையை நாச்சிமுத்து முதலியாரின் வாரிசுகள் தாவா சொத்தை 20.04.2009ம் தேதி கிரய சாசனம் மூலம் சந்திரா, செல்வகணபதி, சாவித்ரி, ஹேமமாலினி, முத்துக்குமார் ஆகியோருக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டதாகவும், இந்த 1ம்பிரதிவாதியின்

WEB COPY

தகப்பனார் பழனிவேலும், அவருடைய தாயார் ரெங்கநாயகியும் தாவா சொத்தில் 6145 சதுரடி மனையை பரிவர்த்தனை பத்திரம் மூலம் 27.03.2013ம் தேதி பெற்று அனுபவித்து வருவது போலவும், இந்த 1ம்பிரதிவாதியின் மாமனார் சுப்பிரமணியன், தாவா சொத்தில் உள்ள 5055 சதுரடி மனையை 27.03.2013ம் தேதி கிரயம் வாங்கியதுபோலவும் ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளார்கள். அந்த ஆவணங்கள் எல்லாம் மோசடியாக சட்டத்திற்கு புறம்பாக ஏற்பட்டதாகும். ஆகையினால் அவை வாதிகளை கட்டுப்படுத்தாது. அவர்கள் சொத்தை அனுபவித்து வருவதுபோல் கூறியிருப்பதும் உண்மையல்ல. 1ம்பிரதிவாதி அதே பாராவில் அவர்கள் எல்லோரும் இந்த வழக்கிற்கு தேவையான, அவசியமான வழக்காடிகள் என்றும் கூறியுள்ளார்கள். வாதிகள் தங்கள் கட்சிக்கு விரோதமன்னியில் பாரா 8ல் கூறப்பட்ட சொத்தை வாங்கியதாக கூறும் சுரேந்திரபாபு, சுப்ரமணியம் ஆகியோரையும் பரிவர்த்தனை மூலம் சொத்தை பெற்றதாக கூறும் 1ம்பிரதிவாதியின் தகப்பனார் பழனிவேல், ரெங்கநாயகி ஆகியோரையும் இந்த வழக்கில் 2 முதல் 5 பிரதிவாதிகளாக சேர்த்துள்ளனர். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது தாவா சொத்தின் ஒரு பகுதியை 6 முதல் 10 பிரதிவாதிகள் கிரயம் பெற்றுள்ளதால், 6 முதல் 10 பிரதிவாதிகள் இந்த வழக்கிற்கு தேவையான, அவசியமான வழக்காடிகள் ஆவர். ஆகவே அவர்களை இந்த வழக்கில் வழக்காடிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். தாவாப்படி தீர்ப்பாக வாதிகள் பிரார்த்திக்கிறார்கள்.

WEB COPY

### 3. <u>பிரதிவாதி (1ம்பிரதிவாதி) தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சுருக்கம்</u> :

இவ்வழக்கு அற்பமாக, தொந்தரவு செய்யவேண்டும் என்பதற்காக வனையப்பட்டுள்ளது. மேலும் சட்டப்படியும், பொருண்மைபடியும் நிலைநிற்கதக்கதல்ல. இந்த பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை வாதி நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். வாதி தாவா சொத்தின்மீது எந்த உரிமையும், பாத்தியமும் அற்ற நபர் ஆவார். இவ்வழக்கை தாக்கல் செய்ய வாதிக்கு சட்ட தகுநிலை கிடையாது. தாவா சொத்திற்கும், பிரதிவாதிக்கும் எந்த தொடர்பும்

இல்லை. தேவையில்லாமல் இவ்வழக்கில் பிரதிவாதியை சேர்த்து ஒருதலைப்பட்ச உத்தரவை வாதி பெற்றுள்ளார். தேவையான தரப்பினர்களை இவ்வழக்கில் சேர்க்காததால் இவ்வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல. புல எண்கள் 1001, 1002, 1003/1&2 மற்றும் 1004 ஆகியவற்றை நாச்சிமுத்து முதலியார் வீட்டுமனை பிரிவுகளை பிரித்தார் என்பது உண்மையாகும். மேற்கண்ட மனை பிரிவு திருச்சி நகர்புற அமைப்பு இணை இயக்குநரால் அனுமதி வழங்கப்பட்டு, மயிலாடுதுறை நகராட்சியால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 11,200 சதுரடி ஆகும். வழக்குரையில் 10,440 சதுரடி என்று கூறப்பட்டுள்ளது தவறு ஆகும். மேற்கண்ட இடம் ( Public Purpose ) பொது பயன்பாட்டிற்கு அமைக்கப்பட்ட இடமாகும். அந்த இடம் நாச்சிமுத்து நகரில் வசிக்கும் நபர்களின் பயன்பாட்டுக்கு மட்டும் உள்ள இடமாக வாதி கூறுவது உண்மைக்கு புறம்பானதாகும். மேற்கண்ட இடத்தினை அசல் உரிமையானரான நாச்சிமுத்து முதலியார் ( Public Purpose ) பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கியுள்ளார் என்பது வாதிக்கு நன்கு தெரியும். அவ்வாறு ஒதுக்கப்பட்ட இடம் அசல் உரிமையாளரின் சொத்துரிமையிலேயே இருக்கும். மேற்கண்ட இடத்தினை மருந்தகம், பேருந்து நிலையம், தபால் நிலையம், காவல் நிலையம், பள்ளி, கல்யாண மண்டபம், சினிமா தியேட்டர் ஆகியவைகள் கட்டுவதற்காகவோ, மற்ற காரணங்களுக்காகவோ பயன்படுத்தலாம், அதேபோல், எந்த துறையினரும் அல்லது எந்த தனியார் நிறுவனமும் மேற்கண்ட இடத்தினை விலைக்கு வாங்கி பயன்படுத்தலாம். ஆறு வருடங்கள் வரை மேற்கண்ட இடம் விற்பனை ஆகவில்லையென்றால் ( Public Purpose ) பொது பயன்பாடு என்று ஒதுக்கப்பட்ட இடம் அதன் உரிமையாளரின் வேறு பல பயன்பாட்டிற்கு மாற்றமாகி விடும். இருந்தாலும் அதற்கான அனுமதியை சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்து உரிமையாளர் பெறவேண்டும். மேற்கண்ட மனை பிரிவு 1978ல் அனுமதிக்கப்பட்டு, 1981ல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. எந்த நபரும் மேற்கண்ட தாவா சொத்தினை விலைக்கு வாங்க முன்வரவில்லை. இந்நிலையில், 29.04.2004 அன்று நாச்சிமுத்து முதலியார் இறந்துவிட்டார். அவருக்கு மனைவியும்,

WEB COPY

நான்கு மகன்களும், மூன்று மகள்களும் இருந்தனர். நாச்சிமுத்து முதலியாரின் சட்டப்படியான வாரிசுகள் என்ற அடிப்படையில் மேற்கண்ட நபர்கள் தாவா சொத்தில் மூங்கில்வேலி அடைத்து தனது அனுபவத்திலும், வசத்திலும் வைத்திருந்தனர். அவர்கள் நகராட்சிக்கு வரியை தொடர்ச்சியாக செலுத்திவந்துள்ளனர். நாச்சிமுத்து முதலியாரின் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து 11,200 சதுரடி இடத்தினை சந்திரா, செல்வகணபதி, சாவித்ரி, ஹேமமாலினி மற்றும் முத்துக்குமார் ஆகியோர்களுக்கு 20.04.2009 அன்று பதிவு செய்யப்பட்ட கிரய சாசனம் மூலம் தக்க பிரதிபிரயோஜனத்திற்கு விற்பனை செய்துவிட்டனர். மேற்கண்ட 11,200 சதுரடி கொண்ட இடத்தில் இந்த பிரதிவாதியின் தந்தை பழனிவேலுவும், தாயார் ரெங்கநாயகியும் 6145 சதுரடி இடத்தினை 27.03.2013 தேதியிட்ட பரிமாற்ற ஆவணம் மூலம் வாங்கியுள்ளனர், மேற்கண்ட இடம் மொத்த விஸ்தீரணத்தின் தென்புறம் அமைந்துள்ளது. மீதமுள்ள 5055 சதுரடியை இந்த பிரதிவாதியின் சகோதரான சுரேந்தர் பாபுவும், இந்த பிரதிவாதியின் மாமனாருமான சுப்பிரமணியனும் விலைக்கு வாங்கியுள்ளனர். அது வடபுறம் அமைந்துள்ளது . மேற்கண்ட விற்பனை 27.03.2013 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரய சாசனம் மூலம் நடைபெற்றுள்ளது. எனவே, மேற்கண்ட நான்கு நபர்களும் தாவா சொத்துக்கு உண்மையான உரிமையாளர்கள் ஆவார்கள். மேலும் அது அவர்களது அனுபவத்தில்தான் இருந்து வருகிறது. அவர்கள் காலிமனைக்கான வரியை நகராட்சிக்கு செலுத்திவருகிறார்கள். எனவே, அவர்கள் இவ்வழக்கிற்கு தேவையான தரப்பினர்கள் ஆவார்கள். 13.10.2013 அன்று இந்த பிரதிவாதியின் தந்தை தாவா சொத்தில் இருந்த பழைய மூங்கில் வேலியை அகற்றிவிட்டு கருங்கல் தூணுடன் இணைந்த முள்கம்பி வேலியை அமைத்தார். அதனை வாதி தவறாக புரிந்துகொண்டு பொது சொத்தை அவர்கள் அபகரிக்கிறார்கள் என்று கூறி காவல்நிலையத்திலும், நகராட்சி அலுவலகத்திலும் தெரிவித்தார். அவர்கள் ஆவணங்களை பரிசீலனை செய்துவிட்டு தவறுதலாக வந்துவிட்டோம் என வெளியேறிவிட்டனர். பின்பு, பிரதிவாதியின் தந்தை முள்கம்பி வேலி அமைப்பை முழுமையாக முடித்துவிட்டு, போய் வருவதற்கு

WEB COPY

கதவு ஒன்றையும் அமைத்துள்ளார். எனவே, தாவா சொத்து இந்த பிரதிவாதியின் உறவினர்கள் மற்றும் அவர்களது உரிமை முன்னவர்களின் அனுபவத்தில்தான் எப்போதும் இருந்து வந்துள்ளது. அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அணுகி அதனை குடியிருப்பு மனையாக மாற்ற அனுமதி கோரியுள்ளனர். வாதி 1978 மனை பிரிவு வரைபடத்தினை மட்டுமே தாக்கல் செய்துள்ளார். 1981ல் மாற்றி அமைக்கப்பட்ட மனைபிரிவின் வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை. 1.1.1987ல் இருந்து 14.10.2013 வரை வாதி தாக்கல் செய்துள்ள வில்லங்க சான்றிதழ் பொய்யானதாகும். மேலும், உண்மை விபரங்களை மறைத்து வழங்கப்பட்ட சான்றாகும். இந்த பிரதிவாதியால் 11200 சதுரடி கொண்ட இடம் உரிமை மாறியதற்கான வில்லங்க சான்றும், 5055 சதுரடி கொண்ட இடம் உரிமை மாறியதற்கான வில்லங்க சான்றும், 6145 சதுரடி கொண்ட இடம் உரிமை மாறியதற்கான வில்லங்க சான்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வேண்டுமென்றே வாதி இந்த பிரதிவாதியை தொந்தரவு செய்வதால் வாதிக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கை எடுக்க பிரதிவாதி முயற்சி செய்துவருகிறார். வாதி எந்த காலத்திலும் தாவா சொத்தின் அனுபவத்திலும், வசத்திலும் இருந்தது இல்லை. உண்மை விபரங்களை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகாததால் அவர்களுக்கு ஆதரவாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல. இவ்வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

WEB COPY

4. **4ம்பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 2,3 மற்றும் 5 பிரதிவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :**

இவ்வழக்கு உண்மைக்கு புறம்பாகவும், அற்பமாக, தொந்தரவு செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளைத் தவிர மற்றசங்கதிகளை வாதி நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். வாதி தாவா சொத்தின் மீது எந்த உரிமையும், பாத்தியமும் அற்ற நபர் ஆவார். இவ்வழக்கை தாக்கல் செய்ய வாதிக்கு சட்ட தகுநிலை

கிடையாது. தாவா சொத்திற்கும், பிரதிவாதிக்கும் எந்த தொடர்பும் இல்லை. புல எண்கள் 1001, 1002, 1003/1&2 மற்றும் 1004 ஆகியவற்றில் நாச்சிமுத்து முதலியார் வீட்டுமனை பிரிவுகளை பிரித்தார் என்பது உண்மையாகும். மேற்கண்ட மனை பிரிவு திருச்சி ஊரக அமைப்பு இணை இயக்குநரால் அனுமதி வழங்கப்பட்டு, மயிலாடுதுறை நகராட்சியால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 11,200 சதுரடி ஆகும். வழக்குரையில் 10,440 சதுரடி என்று கூறப்பட்டுள்ளது தவறு ஆகும். மேற்கண்ட இடம் ( Public Purpose ) பொது பயன்பாட்டிற்கு அமைக்கப்பட்ட இடமாகும். அந்த இடம் நாச்சிமுத்து நகரில் வசிக்கும் நபர்களின் பயன்பாட்டுக்கு மட்டும் உள்ள இடமாக வாதி கூறுவது உண்மைக்கு புறம்பானதாகும். மேற்கண்ட இடத்தினை அசல் உரிமையானரான நாச்சிமுத்து முதலியார் ( Public Purpose ) பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கியுள்ளார் என்பது வாதிக்கு நன்கு தெரியும். அவ்வாறு ஒதுக்கப்பட்ட இடம் அசல் உரிமையாளரின் சொத்துரிமையிலேயே இருக்கும். மேற்கண்ட இடத்தினை மருந்தகம், பேருந்து நிலையம், தபால் நிலையம், காவல் நிலையம், பள்ளி, கல்யாண மண்டபம், சினிமா தியேட்டர் ஆகியவைகள் கட்டுவதற்காகவோ, மற்ற காரணங்களுக்காகவோ பயன்படுத்தலாம், அதேபோல், எந்த துறையினரும் அல்லது எந்த தனியார் நிறுவனமும் மேற்கண்ட இடத்தினை விலைக்கு வாங்கி பயன்படுத்தலாம். ஆறு வருடங்கள் வரை மேற்கண்ட இடம் விற்பனை ஆகவில்லையென்றால் ( Public Purpose ) பொது பயன்பாட்டு என்று ஒதுக்கப்பட்ட இடம் அதன் உரிமையாளரின் வேறு பல பயன்பாட்டிற்கு மாற்றமாகி விடும். இருந்தாலும் அதற்கான அனுமதியை சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்து உரிமையாளர் பெறவேண்டும். மேற்கண்ட மனை பிரிவு 1978ல் அனுமதிக்கப்பட்டு, 1981ல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. எந்த நபரும் மேற்கண்ட தாவா சொத்தினை விலைக்கு வாங்க முன்வரவில்லை. இந்நிலையில் 29.04.2004 அன்று நாச்சிமுத்து முதலியார் இறந்துவிட்டார். அவருக்கு மனைவியும், நான்கு மகன்களும், மூன்று மகள்களும் இருந்தனர். நாச்சிமுத்து முதலியாரின் சட்டப்படியான வாரிசுகள் என்ற

WEB COPY

அடிப்படையில் மேற்கண்ட நபர்கள் தாவா சொத்தில் மூங்கில்வேலி அடைத்து தனது அனுபவத்திலும், வசத்திலும் வைத்திருந்தனர். அவர்கள் நகராட்சிக்கு வரியை தொடர்ச்சியாக செலுத்திவந்துள்ளனர். நாச்சிமுத்து முதலியாரின் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து 11,200 சதுரடி இடத்தினை சந்திரா, செல்வகணபதி, சாவித்ரி, ஹேமமாலினி மற்றும் முத்துக்குமார் ஆகியோர்களுக்கு 20.04.2009 அன்று பதிவு செய்யப்பட்ட கிரய சாசனம் மூலம் தக்க பிரதிபிரயோஜனத்திற்கு விற்பனை செய்துவிட்டனர். மேற்கண்ட 11,200 சதுரடி கொண்ட இடத்தில் இந்த பிரதிவாதியின் தந்தை பழனிவேலுவும், தாயார் ரெங்கநாயகியும் 6145 சதுரடி இடத்தினை 27.03.2013 தேதியிட்ட பரிமாற்ற ஆவணம் மூலம் வாங்கியுள்ளார். மேற்கண்ட இடம் மொத்த விஸ்தீரணத்தின் தென்புறம் அமைந்துள்ளது. மீதமுள்ள 5055 சதுரடியை இந்த பிரதிவாதியின் சகோதரான சுரேந்தர் பாபுவும், இந்த பிரதிவாதியின் மாமனாருமான சுப்பிரமணியனும் விலைக்கு வாங்கியுள்ளனர். அது வடபுறம் அமைந்துள்ளது. மேற்கண்ட விற்பனை 27.03.2013 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரய சாசனம் மூலம் நடைபெற்றுள்ளது. எனவே, மேற்கண்ட நான்கு நபர்களும் தாவா சொத்துக்கு உண்மையான உரிமையாளர்கள் ஆவார்கள். மேலும் அது அவர்களது அனுபவத்தில்தான் இருந்து வருகிறது. அவர்கள் காலிமனைக்கான வரியை நகராட்சிக்கு செலுத்திவருகிறார்கள். 13.10.2013 அன்று இந்த பிரதிவாதியின் தந்தை தாவா சொத்தில் இருந்த பழைய மூங்கில் வேலியை அகற்றிவிட்டு கருங்கல் தூணுடன் இணைந்த முள்கம்பி வேலியை அமைத்தார். அதனை வாதி தவறாக புரிந்துகொண்டு பொது சொத்தை அவர்கள் அபகரிக்கிறார்கள் என்று கூறி காவல்நிலையத்திலும், நகராட்சி அலுவலகத்திலும் தெரிவித்தார். அவர்கள் ஆவணங்களை பரிசீலனை செய்துவிட்டு தவறுதலாக வந்துவிட்டோம் என வெளியேறிவிட்டனர். எனவே, பிரதிவாதியின் தந்தை வேலி அமைப்பை முழுமையாக முடித்துவிட்டு, போய் வருவதற்கு கதவு ஒன்றை அமைத்துள்ளார். எனவே, தாவா சொத்து இந்த பிரதிவாதியின் உறவினர்கள் மற்றும் அவர்களது உரிமை முன்னவர்களின் அனுபவத்தில்தான் எப்போதும் இருந்து வந்துள்ளது. வாதியின் அனுபவத்தில்

WEB COPY

என்றும் இருந்தது இல்லை. பரிவர்த்தனை ஆவணமும், கிரய ஆவணங்களும் பிரதிவாதிகளால் போலியாக உருவாக்கப்பட்டுள்ளது என்று வாதி தெரிவித்துள்ளது உண்மைக்கு புறம்பானதாகும். வாதியால் பெறப்பட்டுள்ள 1.1.1987 முதல் 14.10.2013 வரை உள்ள வில்லங்க சான்று உண்மை விபரங்களை மறைத்து மோசடியாக உருவாக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அதே சொத்து விபத்திற்கு இந்த பிரதிவாதி 1.1.1987 முதல் 3.11.2013 வரை உள்ள வில்லங்க சான்றினை பெற்றுள்ளார். அதில் அனைத்து பரிவர்த்தனை மற்றும் செய்து உரிமை மாற்றங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து வாதி எவ்வளவு மோசடியாக செயல்பட்டுள்ளார் என்பது தெள்ளத்தெளிவாக தெரியவரும். இந்த பிரதிவாதி வாதியின் மீது எடுக்க இருக்கும் குற்றவியல் நடவடிக்கையினை நிலைநிறுத்திக் கொள்கிறார். வாதியால் 1978ம் ஆண்டு மனைபிரிவு வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1981ம் ஆண்டு மனைபிரிவு மாற்றி அமைக்கப்பட்ட வரைபடம் தாக்கல் செய்யப்படவில்லை. தாவாசொத்து பூங்கா மற்றும் சாலைகள் ஆகியவைகள் அமைக்க பொது பயன்பாட்டுக்கு கொடையாக கொடுக்கப்பட்டுள்ளது என்று வாதி தவறாக புரிந்து கொண்டுள்ளார். மேற்கண்ட இடம் ( Public Purpose ) பொது பயன்பாட்டிற்காக மட்டுமே ஒதுக்கப்பட்டு, அதன் சொத்துரிமை அதன் உரிமையாளரிடமே இருக்கும். வாதி எந்த காலத்திலும் தாவா சொத்தின் வசம் மற்றும் அனுபவத்தில் இருந்தது இல்லை. உண்மை விபரங்களை மறைத்து தூய கரங்கள் இல்லாமலும் இவ்வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளதால் அவர் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல. இவ்வழக்கு பொய்யாகவும், தகுநிலை இல்லாமலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

5. **10ம்பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 6,7,8 மற்றும் 9 பிரதிவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்** :

இவ்வழக்கின் வழக்குரையில் இதனடியில் கண்டுள்ள சங்கதிகளில் இந்த பிரதிவாதி ஒப்புக்கொண்ட சங்கதிகளைத் தவிர ஏனையவைகளை

WEB COPY

உண்மையானவையல்ல என்பதால் வன்மையாக மறுக்கின்றார். அவைகளை வாதிகள் சட்டப்படியும், நியாயப்படியும் நிரூபிக்க கடமைப்பட்டவராவார்கள். வாதிகள் துர்லாபம் கருதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். வாதிகள் போலியான ஆவணங்களை தயார் செய்து பதிவாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்து சங்கம் பதிவு செய்து வழக்கை தொடுக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் செயல்பட்டு இருக்கிறார்கள். வாதிகள் பிராதில் குறிப்பிட்டுள்ள நாச்சிமுத்து குடியிருப்போர் நலச் சங்கம் என்ற பெயரில் சங்கம் செயல்படவே இல்லை. பிரதிவாதிகளுக்கு இடையூறு கொடுக்கவேண்டும் என்ற கெட்ட நோக்கத்துடனும் துர்லாபம் கருதி குடியிருப்போர் நல சங்கம் என்ற பெயரில் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். வாதிகள் வழக்கு தொடர எந்தவிதமான உரிமையும் வழக்கு மூலமும் கிடையாது. 6 முதல் 10 பிரதிவாதிகள் தாவா சொத்தினை காலஞ்சென்ற நாச்சிமுத்து முதலியாரின் வாரிசுகளிடமிருந்து 20.04.2009ம்தேதி கிரய சாசனம் மூலம் கிரயம் வாங்கி ஆண்டு அனுபவித்து வந்துள்ளார்கள். அந்த கிரய சாசனம் மயிலாடுதுறை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.135/2009 என்ற எண்ணாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அதுமுதல் தாவா இடத்தை 6 முதல் 10 பிரதிவாதிகள் முழு உரிமையாளர் என்ற முறையில் ஆண்டு அனுபவித்து வந்தார்கள். மேலும் தாவா இடத்திற்குரிய நகராட்சி வரியையும் செலுத்திவந்தார்கள். தாவா இடத்தில் 6145 சதுரடி மனையை 6 முதல் 10 பிரதிவாதிகள் 23.03.2013 அன்று பதிவு செய்யப்பட்ட பரிவர்த்தனை பத்திரம் மூலம் 4 மற்றும் 5ம்பிரதிவாதிகளிடம் கொடுத்துவிட்டனர். தாவா சொத்தில் 5055 சதுரடி மனையை 27.03.2013 பதிவு செய்யப்பட்ட கிரய சாசனம் மூலம் 2 மற்றும் 3ம்பிரதிவாதிகளிடம் கிரயம் செய்து கொடுத்துவிட்டனர். மேற்படி தாவா இடத்தை 2 முதல் 5 பிரதிவாதிகள் வசம் எடுத்து அனுபவித்து வருகின்றார்கள். தாவா சொத்திற்கு 2 முதல் 5ம் பிரதிவாதிகள்தான் முழு உரிமையாளர் ஆவார்கள். ஆகவே 6 முதல் 10 பிரதிவாதிகள் இந்த வழக்கிற்கு தேவையற்ற வழக்காடிகள் ஆவார்கள். இந்த பிரதிவாதி வழக்கை தள்ளுபடி செய்யும்படி பிரார்த்திக்கின்றார். பிராதில் வாதிகள் கோரியுள்ள வழக்கு சொத்துக்களை வாதிகள் அமைதியான முறையில் அனுபவிப்பதை

WEB COPY

பிரதிவாதிகள் தடுக்காவண்ணம் பிரதிவாதிகள் பெயரில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்ககூடியதல்ல. எனவே வாதிகளின் வழக்கினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமாய் 10ம்பிரதிவாதி பிரார்த்திக்கிறார்.

6. **மேற்கண்ட வழக்குரை, எதிர்வழக்குரையின்பேரில் வனையப்பட்ட எழுவினாக்கள்:**

1) வாதிகளுக்கு அவர்கள் கோருவது போல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கக்கூடியதா?

2) தரப்பினர்களுக்கு வேறு என்ன பரிகாரம் கிடைக்கத்தக்கது ?

WEB COPY

7. இவ்வழக்கின் வாதிகள் தரப்பில், 2ம்வாதியான திரு.ரபி அகமது (2ம்வாதி ) என்பவர் வா.சா.1 ஆகவும், மூன்றாம் தரப்பினரான திரு.ராஜேந்திரன் என்பவர் வா.சா.2 ஆகவும், மயிலாடுதுறை நகராட்சி நகர சார் ஆய்வாளர் திரு.நீலராஜ் என்பவர் வா.சா. 3 ஆகவும், தஞ்சாவூர் நகர் ஊரமைப்புத் துறை மண்டல அலுவலக வரைவாளர் நிலை 3 ஆன திரு.குமரேசன் என்பவர் வா.சா.4 ஆகவும் விசாரிக்கப்பட்டு, தாவா சொத்திற்கான வில்லங்கச் சான்று. (01.01.1987 முதல் 16.10.2013 வரை)(அசல்) வா.சா.ஆ.1 ஆகவும், ராஜேந்திரன் என்பவருக்கு பாலசுப்பிரமணியனின் ஜெனரல் பவர் ஏஜண்டு பெற்ற நாச்சிமுத்து முதலியார் பவர் ஏஜண்டு என்ற முறையிலும் மற்றும் நாச்சிமுத்து முதலியாரின் மகன் சந்திரசேகரன் ஆகிய இருவரும் சேர்ந்து எழுதிக் கொடுத்த கிரய பத்திரம் ( பதிவு செய்யப்பட்டதன் உண்மை நகல் ) வா.சா.ஆ.2 ஆகவும், டாக்டர் சிவக்குமாருக்கு டாக்டர் கண்ணன் எழுதிக் கொடுத்த கிரய பத்திரம் (பதிவு செய்யப்பட்டதன் உண்மை நகல்) வா.சா.ஆ.3 ஆகவும், தஞ்சாவூர் மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள் பாத்திமா ஜின்னா என்பவருக்கு அனுப்பிய

கடிதம் லேவுட்-உடன் கூடியது ( அசல்) வா.சா.ஆ.4 ஆகவும், தாவா சொத்திற்கான வில்லங்கச் சான்று (01.01.1987 முதல் 04.12.2013 வரை)(அசல்) வா.சா.ஆ.5 ஆகவும், வாதிகள் நல சங்கத்திற்கு மயிலாடுதுறை எண்.1 இணை சார்பதிவாளர் கொடுத்த பற்று சீட்டு (அசல்) வா.சா.ஆ.6 ஆகவும், வாதிகள் நல சங்கதிற்கு மயிலாடுதுறை பதிவாளர் கொடுத்த பதிவுச் சான்று ( அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல்) வா.சா.ஆ.7 ஆகவும், மயிலாடுதுறை எண்1 இணை சார்பதிவாளரால் வாதிகள் நல சங்கத்திற்கு கொடுக்கப்பட்ட கட்டண ரசீது (அசல்) வா.சா.ஆ.8 ஆகவும், 1ம்வாதிக்கு நாகப்பட்டிணம் மாவட்ட குற்றப்பிரிவு துணை காவல் கண்காணிப்பாளரால் அனுப்பப்பட்ட காவல்துறை அழைப்பாணை (அசல்) வா.சா.ஆ.9 ஆகவும், 10ம்பிரதிவாதி தனது வழக்கறிஞர் மூலம் முஹம்மது சுலைமான், இம்தியாஸ்காசிம், அக்பர்அலி ஆகியோர்களுக்கு அனுப்பிய அறிவிப்பு (அசல்) வா.சா.ஆ.10 ஆகவும், வா.சா.ஆ-10 அறிவிப்புக்கு முஹம்மது சுலைமான், இம்தியாஸ்காசிம், அக்பர்அலி மற்றும் அவர்களது மாமனாரும் கொடுத்த பதில் அறிவிப்பு (அலுவலக நகல்) வா.சா.ஆ.11 ஆகவும், கோமல் அன்பரசன் என்பவர் வெளியிட்டுள்ள "மாயூர யுத்தம்" என்ற புத்தகத்தின் 34ம் பக்கம் (முழு புத்தகத்துடன் உள்ளது) (அசல்) வா.சா.ஆ.12 ஆகவும், தினகரன் நாளிதழில் வெளியான "மயிலாடுதுறையில் புதிய பஸ்நிலைய பணி விரைவில் தொடங்கும் - அரசுக்கு அறிக்கை நகர்மன்ற கூட்டத்தில் தகவல் " என்ற குறிப்பு (அசல்) வா.சா.ஆ.13 ஆகவும், மயிலாடுதுறை நகராட்சி அலுவலகத்திலிருந்து நாச்சிமுத்துநகர் முருகன் என்பவருக்கு அனுப்பப்பட்ட கடிதம் (அசல்) வா.சா.ஆ.14 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. இவ்வழக்கில், பிரதிவாதிகள் தரப்பில், 4ம்பிரதிவாதியான திரு.பழனிவேலு என்பவர் பி.வா.சா.1 ஆகவும், மயிலாடுதுறை இணை1 சார்பதிவாளரான திரு.அசோக்குமார் என்பவர் பி.வா.சா.2 ஆகவும், மயிலாடுதுறை மாவட்ட பதிவாளரான திருமதி.சசிகலா என்பவர் பி.வா.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டு, நாச்சிமுத்து முதலியார் என்பவருக்கு சொக்கலிங்கம் செட்டியார் வகையறா எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம் (அசல் பதிவு செய்யப்பட்டது) பி.வா.சா.ஆ.1 ஆகவும், திருச்சிராப்பள்ளி

WEB COPY

கன்டோன்மெண்ட் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், நாச்சிமுத்து முதலியார் மகன் ஜெயசங்கருக்கு அனுப்பிய கடிதம் (அசல்) பி.வா.சா.ஆ.2 ஆகவும், ஜெயசங்கர் என்பவர் திருச்சிராப்பள்ளி திருச்சி துணை நகர ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு அனுப்பிய கடிதம் (நகல்) பி.வா.சா.ஆ.3 ஆகவும், விஜயசரவணன் என்பவருக்கு வீட்டு மற்றும் ஊரக வளர்ச்சித்துறையில் இருந்து அனுப்பிய தகவல் கடிதம் மற்றும் அதன் தொடர்புடைய இரண்டு கடிதங்கள் (அசல்) பி.வா.சா.ஆ.4 ஆகவும், பழனி அம்மாள் என்பவருக்கு பாலசுப்ரமணியன் என்பவர் எழுதிவைத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் (அசல் பதிவு செய்யப்பட்டது) பி.வா.சா.ஆ.5 ஆகவும், சந்திரசேகரன் என்பவருக்கு பழனியம்மாள் என்பவர் எழுதிவைத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் (அசல் பதிவு செய்யப்பட்டது) பி.வா.சா.ஆ.6 ஆகவும், பாலசுப்ரமணியன் என்பவருக்கு பழனி அம்மாள் என்பவர் எழுதிவைத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் (அசல் பதிவு செய்யப்பட்டது) பி.வா.சா.ஆ.7 ஆகவும், ஜெயசங்கர் என்பவருக்கு பழனி அம்மாள் என்பவர் எழுதிவைத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் (அசல் பதிவு செய்யப்பட்டது) பி.வா.சா.ஆ.8 ஆகவும், கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு பழனி அம்மாள் என்பவர் எழுதிவைத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் (அசல் பதிவு செய்யப்பட்டது) பி.வா.சா.ஆ.9 ஆகவும், நாச்சிமுத்து என்பவரின் இறப்பு சான்றிதழ் (சான்றிட்ட நகல்) பி.வா.சா.ஆ.10 ஆகவும், உத்தமன் என்பவருக்கு மாலதி என்கிற பாக்கியலெட்சுமி என்பவர் எழுதிக்கொடுத்த ஜெனரல் பவர் பத்திரம் (அசல் பதிவு செய்யப்பட்டது) பி.வா.சா.ஆ.11 ஆகவும், உத்தமன் என்பவருக்கு கஸ்தூரி (எ) கிருஷ்ணவேணி, மங்களாம்பிகை (எ) மங்களம் எழுதிக்கொடுத்த ஜெனரல் பவர் பத்திரம் (அசல் பதிவு செய்யப்பட்டது) பி.வா.சா.ஆ.12 ஆகவும், சந்திரா மற்றும் நால்வருக்கும் பழனியம்மாள் மற்றும் ஏழு நபர்கள் சேர்ந்து எழுதிக் கொடுத்த கிரய பத்திரம் (அசல் பதிவு செய்யப்பட்டது) பி.வா.சா.ஆ.13ஆகவும், ஹேமமாலினி என்பவருக்கு சந்திரசேகரன் என்பவர் எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டு தொகை வரவு ரசீது (அசல் பதிவு செய்யப்பட்டது)

WEB COPY

பி.வா.சா.ஆ.14 ஆகவும், சந்திரா என்பவருக்கு பழனியம்மாள் என்பவர் எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டு தொகை வரவு ரசீது (அசல் பதிவு செய்யப்பட்டது) பி.வா.சா.ஆ.15 ஆகவும், முத்துக்குமார் என்பவருக்கு கிருஷ்ணமூர்த்தி என்பவர் எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டு தொகை வரவு ரசீது (அசல் பதிவு செய்யப்பட்டது) பி.வா.சா.ஆ.16 ஆகவும், வில்லங்கச் சான்று (01.01.1987 முதல் 23.12.2012 வரை)(அசல்) பி.வா.சா.ஆ.17 ஆகவும், வில்லங்கச் சான்று (01.01.2012 முதல் 03.11.2013 வரை) (அசல்) பி.வா.சா.ஆ.18 ஆகவும், வில்லங்கச் சான்று (01.01.2012 முதல் 03.11.2013 வரை)(அசல்) பி.வா.சா.ஆ.19 ஆகவும், வில்லங்கச் சான்று. (01.01.1987 முதல் 16.10.2013 வரை)(அசல்) பி.வா.சா.ஆ.20 ஆகவும், தாவா சொத்திற்கான சொத்துவரி ரசீதுகள் (6எண்ணிக்கைகள்) மற்றும் வேலி அமைத்ததற்கான ரசீது (1எண்ணிக்கை) பி.வா.சா.ஆ.21 ஆகவும், மயிலாடுதுறை நகர நிலவரித்திட்ட தனி வட்டாட்சியரின் செயல்முறைகள் (அசல்) பி.வா.சா.ஆ.22 ஆகவும், தாவா சொத்திற்கான நகரளவு புல வரைபடம் (உண்மை நகல்) பி.வா.சா.ஆ.23 ஆகவும், சுப்பிரமணியன், பழனிவேலு, ரெங்கநாயகி, சுரேந்தர் பாபு பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா (பட்டா எண்.74) (அசல்) பி.வா.சா.ஆ.24 ஆகவும், சுப்பிரமணியன், பழனிவேலு, ரெங்கநாயகி, சுரேந்தர் பாபு பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா (பட்டா எண்.74) (அசல்) பி.வா.சா.ஆ.25 ஆகவும், சுப்பிரமணியன், பழனிவேலு, ரெங்கநாயகி, சுரேந்தர் பாபு பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா (பட்டா எண்.74) (அசல்) பி.வா.சா.ஆ.26 ஆகவும், சுப்பிரமணியன், பழனிவேலு, ரெங்கநாயகி, சுரேந்தர் பாபு பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா (பட்டா எண்.74) (அசல்) பி.வா.சா.ஆ.27 ஆகவும், சுப்பிரமணியன், சுரேந்தர் பாபு பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா (பட்டா எண்.72) (அசல்) பி.வா.சா.ஆ.28 ஆகவும், சுப்பிரமணியன், சுரேந்தர் பாபு பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா (பட்டா எண்.72) (அசல்) பி.வா.சா.ஆ.29 ஆகவும், 20.03.2015 பழனிவேலு, ரெங்கநாயகி பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா (பட்டா எண்.73) (அசல்) பி.வா.சா.ஆ.30 ஆகவும்,

WEB COPY

பழனிவேலு, ரெங்கநாயகி பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா (பட்டா எண்.73) (அசல்) பி.வா.சா.ஆ.31 ஆகவும், சந்திரா வகையறா மற்றும் பழனிவேலு வகையறா செய்து கொண்ட சொத்துக்கள் பரிவர்த்தனை ஆவணம்.(அசல் பதிவு செய்யப்பட்டது) பி.வா.சா.ஆ.32 ஆகவும், சுப்பிரமணியன் மற்றும் சுரேந்தர் பாபுவிற்கு சந்திரா வகையறா எழுதிக் கொடுத்த கிரய பத்திரம் (அசல் பதிவு செய்யப்பட்டது) பி.வா.சா.ஆ.33 ஆகவும், தாவா சொத்திற்கான சொத்துவரி ரசீதுகள் (2எண்ணிக்கை), சொத்து வரிக்கான கேட்பு அறிவிப்பு (1எண்ணிக்கை) (அசல்) பி.வா.சா.ஆ.34 ஆகவும், மாயூரம் நகராட்சி ஆணையரால் வழங்கப்பட்ட மனை பிரிவு திட்ட அனுமதி வரைபடம் (L.P.No.77/81 உடையது) பி.வா.சா.ஆ. 35 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9. மேலும், தாவா இடத்தை ஸ்தல ஆய்வு செய்தது குறித்த நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோப்புகள் அடங்கியது. (8தாள்களை கொண்டது (அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல்) சா.சா.ஆ-1 ஆகவும், நாச்சிமுத்து முதலியார் பெயரில் உள்ள வில்லங்கசான்று மனு,சொத்துவிபரம் மற்றும் 17.10.2013 தேதியிட்ட 01.01.1987 முதல் 16.10.2013 வரையுள்ள வில்லங்கச்சான்று ( அசலுடன் ஒப்பிடப்பட்ட உண்மை நகல்) சா.சா.ஆ-2 ஆகவும், பரதன் என்பவர் பெயரில் உள்ள வில்லங்கசான்று மனு, சொத்துவிபரங்கள் ( அசலுடன் ஒப்பிடப்பட்ட உண்மை நகல்) சா.சா.ஆ-3 ஆகவும், நாச்சிமுத்து நகர் குடியிருப்போர் நல சங்கம் வரவு செலவு கணக்கு 21.10.2013 முதல் 31.3.2014 வரை ( அசலுடன் ஒப்பிடப்பட்ட உண்மை நகல்) சா.சா.ஆ-4 ஆகவும், நாச்சிமுத்து நகர் குடியிருப்போர் நல சங்கம் பெயரில் உள்ள படிவம் 7 ( உறுப்பினர் நீக்கம் பற்றிய விபரம்) ( அசலுடன் ஒப்பிடப்பட்ட உண்மை நகல்) சா.சா.ஆ-5 ஆகவும், நாச்சிமுத்து நகர் குடியிருப்போர் நல சங்கம் வரவு செலவு கணக்கு 01.04.2015 முதல் 31.3.2016 வரை ( அசலுடன் ஒப்பிடப்பட்ட உண்மை நகல்) சா.சா.ஆ-6 ஆகவும், நாச்சிமுத்து நகர் குடியிருப்போர் நல சங்கம் பெயரில் உள்ள படிவம் 7 ( நிர்வாக குழு மறு

WEB COPY

நியமனம் பற்றிய விபரம்) ( அசலுடன் ஒப்பிடப்பட்ட உண்மை நகல்) சா.சா.ஆ-7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10. **<u>கற்றறிந்த 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையை எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ளார். அதன் சுருக்கம்</u> :**

" புலஎண்கள் 1000, 1001, 1002, 1003/1 மற்றும் 2 மற்றும் 1004 ஆகியவைகளின் அசல் உரிமையாளர் நாச்சிமுத்து முதலியார் ஆவார். அவைகள் மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு திருச்சி, நகர் மற்றும் நகர்புற அமைப்பு இணை இயக்குநரால் அனுமதிக்கப்பட்டு, மயிலாடுதுறை நகராட்சியால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. முதலில் அனுமதி எண்.56/ 1978 வழங்கப்பட்டது. வழக்குரையில் கூறப்பட்டுள்ள தாவா சொத்து 10,440 சதுரடி என்பது தவறாகும். 11,200 சதுரடிதான் சரியாகும். மேற்கண்ட இடம் ( Public Purpose ) பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டதாகும். அதை மருந்தகம், பேருந்து நிலையம், அஞ்சல் நிலையம், காவல் நிலையம், பள்ளி, கல்யாண மண்டபம் ஆகியவைகள் அமைக்க பயன்படுத்தலாம். தமிழ்நாடு நகர்புற அமைப்பு விதிகள்படி ( Public Purpose ) பொது பயன்பாடு என்ற இடத்தில் எந்த துறையினரோ அல்லது எந்த தனியார் அமைப்புகளோ விலைக்கு வாங்கி மேலே கூறப்பட்டுள்ளவாறு பயன்படுத்தலாம். ஆதியில் மனை பிரிவு அனுமதி வழங்கப்பட்ட பின்பு மனை பிரிவு பகுதியில் பள்ளி அமைக்க இடம் ஒதுக்கப்பட்டது. 29.04.2004 அன்று மனைவி, நான்கு மகன்கள், மூன்று மகள்கள் ஆகியோர்களை விட்டுவிட்டு நாச்சிமுத்து முதலியார் இறந்துவிட்டார். மேற்கண்ட நபர்கள் வாரிசுகள் என்ற முறையில் தாவா சொத்துக்களை அனுபவித்து, நகராட்சிக்கு வரியும் செலுத்தியுள்ளனர். நாச்சிமுத்துவின் சட்டப்படியான வாரிசுகள் 11,200 சதுரடி கொண்ட இடத்தினை சந்திரா, செல்வகணபதி, சாவித்ரி, ஹேமமாலினி மற்றும் முத்துக்குமார் ஆகியோர்களுக்கு 20.04.2009 அன்று பதிவு செய்யப்பட்ட கிரய ஆவண எண்.735/2009ன் மூலம் விற்பனை செ்துள்ளனர். இவ்வழக்கின் 4,5 பிரதிவாதிகளான பழனிவேலும், ரெங்கநாயகியும் புல எண்.1001/2, 1003/2க்கு கட்டுப்பட்ட 4145 சதுரடி மற்றும் 2000 சதுரடி ஆக கூடுதல் 6145 சதுரடி கொண்ட இடத்தினை பரிவர்த்தனை ஆவண எண்.622/2013ன் மூலம் 27.03.2013 அன்று மேற்கண்ட ஐந்து நபர்களிடமிருந்து பெற்றுள்ளனர். மேற்கண்ட ஆவணம் இணை 1 சார்பதிவாளர், மயிலாடுதுறை அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2,3பிரதிவாதிகள் புல எண்கள் 1000/ 2, 1001/2 ஆகியவற்றிற்கு கட்டுப்பட்ட 1093 சதுரடி மற்றும் 3962 சதுரடி

WEB COPY

ஆக கூடுதல் 5055 சதுரடி கொண்ட இடத்தினை பதிவு செய்யப்பட்ட கிரய ஆவண எண்.621/2013ன் மூலம் மேற்கண்ட ஐந்து நபர்களிடமிருந்து விலைக்கு வாங்கியுள்ளனர். மேற்கண்ட ஆவணம் 27.03.2013 அன்று மயிலாடுதுறை இணை 1 சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணங்களின் அடிப்படையில் 2 முதல் 5வரையுள்ள பிரதிவாதிகள் தாவா சொத்தின் முழுமையான உரிமையாளர்கள் ஆகிவிட்டனர். தாவா சொத்தினை பெற்ற காலத்திலிருந்து அவர்களது அனுபவத்திலும், வசத்திலும்தான் தாவா சொத்து இருந்து வருகிறது. அவர்கள் தாவா சொத்துக்குரிய வரியினை நகராட்சிக்கு இன்றைய தேதிவரை செலுத்திவருகின்றனர். 13.10.2013 அன்று தாவா சொத்தில் இருந்த பழைய மூங்கில் வேலியை அகற்றிவிட்டு கருங்கல் தூணுடன் இணைந்த முள்கம்பி வேலியை 2 முதல் 5வரையுள்ள பிரதிவாதிகள் அமைத்தனர். அதனால் வாதிகள் நாச்சிமுத்து நகர் நல குடியிருப்பு சங்கம் என்ற பெயரில் ஒரு சங்கத்தினை உருவாக்கி அதனை மயிலாடுதுறை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து 1978ல் ஏற்பட்ட பழைய மனைபிரிவு வரைபடத்தின் அடிப்படையிலும், 13 பதிவுகளை மறைத்து பெறப்பட்ட இரண்டு போலியான வில்லங்க சான்றின் அடிப்படையிலும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். இவ்வழக்கு கீழ்க்கண்ட காரணங்களுக்காக நிலைநிற்கத்தக்கதல்ல.

(a) வாதிகள் 27நபர்களை கொண்டு சங்கம் ஆரம்பித்துள்ளார்கள். ஆறு உறுப்பினர்கள் வெளிநாட்டில் வசித்து வருகிறார்கள் என்பதால் இந்த சங்கம் சட்டவிரோதமான சங்கம். அதனை பதிவு செய்தது சட்டவிரோதம்.

(b) தமிழ்நாடு சங்கங்கள் அமைப்பு சட்டம் பிரிவு 15(3)ன்படி உறுப்பினர்கள் கொண்ட ஆணையம் என்பது அதிகப்படியான உறுப்பினர்கள் முன்னிலையாகி எடுக்கப்படும் தீர்மானத்தின் அடிப்படையில் அமைக்கப்படும். அந்த ஆணையம் மூன்று வருடங்களுக்கு மேல் செயல்படாது. எனவே, வாதிகள் சங்கத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட்டவர்கள் அல்ல. வாதிகள் சங்க தீர்மானங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்பதால் வாதிகள் நாச்சிமுத்து நகர குடியிருப்பு சங்கத்தின் சார்பாக செயல்படஅதிகாரம் அற்றவர்கள் ஆவார்கள்.

(c) கட்டளை 1 விதி 8 உரிமயியல் நடைமுறை சட்டம் பிரதிநிதித்துவ வழக்கு குறித்து எடுத்துரைக்கிறது, அதன்படி நிறைய நபர்களுக்கு தொடர்புடைய சங்கதி குறித்து ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டநபர்களோ நீதிமன்ற அனுமதியுடன் வழக்கை தொடரவோ, வழக்கை நடத்தவோ முடியும். ஆனால், சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் அறிவிப்பு அனுப்பப்படவேண்டும். இந்நீதிமன்றம் கட்டளை 1 விதி 8 உரிமையியல் நடைமுறை சட்டப்படி அனைத்து

உறுப்பினர்களுக்கும் அறிவிப்பு அனுப்பவில்லை. எனவே, இவ்வழக்கு நடவடிக்கைகள் செல்லத்தக்கதல்ல.

(d) வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வில்லங்க சான்றிதழ் எண்கள் 3296 மற்றும் 3319/2013 ஆகியவைகள் முழுமைபெறாத போலியாக உருவாக்கப்பட்ட ஆவணங்கள் ஆகும். மயிலாடுதுறை இணை 1 சார்பதிவாளர் வழங்கிய வில்லங்க சான்று எண் 829/2014 13 பதிவுகளைக் கொண்ட 1.1.1987 முதல் 16.10.2013 வரையுள்ள காலத்திற்கான வில்லங்க சான்றாகும். முதலில் வாதிகளால் வழங்கப்பட்டுள்ள வில்லங்கச் சான்றில் இணை 1 சார்பதிவாளர் அவர்களின் வஞ்சக்கூட்டுடன் 13 ஆவணங்களின் பதிவுகள் மறைக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கு பொய்யான ஆவணங்களுடனும், பொய்யான உறுதிகளுடனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(e) வாதிகளால் பிரதான்பாபுவிற்கு எதிராக மட்டும் முதலில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதில் பிரதிவாதி தாவாசொத்தில் கட்டிடம் கட்ட முயற்சிசெய்கிறார் என்று கூறப்பட்டது. மேற்கண்ட இடைக்கால மனுவில் எதிர்மனுதாரர் தாவா சொத்தில் எவ்விதமான கட்டுமானமும் செய்யப்போவதில்லை என மேலெழுத்து செய்து கொடுத்ததால் 28.11.2013 அன்று மனு முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட உத்தரவு சட்டவிரோதமானதும், இயற்கை நீதிக்கு எதிரானதும் ஆகும். ஏனெனில், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மட்டுமே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கிடை விண்ணப்ப எண்.607/ 2013ல் இடைக்கால உறுத்துக்கட்டளையும், விண்ணப்பம் முடியும் வரையான தற்காலிக உறுத்துக்கட்டளையும் கோரப்பட்டுள்ளது. ஆனால், இந்நீதிமன்றம் மனுதாரர்கள்/வாதிகள் தாவா சொத்தின் அனுபவத்தில் உள்ளார்களா? என்பதையும், அவர்களுக்கு இடைக்கால உறுத்துக்கட்டளை கிடைக்கக்கூடியதா? என்பதையும் பரிசீலனை செய்யாமல் உத்தரவு பிறப்பித்துள்ளது. பிரதிவாதி தாவா சொத்தின்மீது தனக்கு எந்த உரிமையும் இல்லை என்று ஒப்புக்கொண்டுள்ள நிலையில் இடைக்கால உத்தரவை 28.11.2013க்கு பின்பு நீட்டிப்பு செய்ய இயலாது. பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட வழக்கு அறிவிப்பில் Status quo உத்தரவாகி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், 6.11.2013 அன்று இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டு 20.11.2013 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே, 29.10.2013 மற்றும் 6.11.2013 ஆகிய தேதிகளில் இந்நீதிமன்றம் வழங்கிய உத்தரவு முன்னுக்குப் பின் வேறுபட்டுள்ளது. பிரதான்பாபு தாவா சொத்தில் தனக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்று எதிருரை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர் கோரும் பரிகாரம் இல்லா நிலையை

WEB COPY

அடைந்துவிட்டது. அதனால் உறுத்துக்கட்டளை நீட்டிப்பு செய்யவேண்டிய அவசியமும் இல்லை. இந்நீதிமன்றத்தால் 6.11.2013, 20.11.2013 ஆகிய நாட்களில் வழங்கிய உறுத்துக்கட்டளையும், உறுத்துக்கட்டளை நீட்டிப்பு செய்த உத்தரவும் உண்மையான வசம் மற்றும் சுவாதீனத்தை தெரிந்துகொள்ளாமல் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வழக்கு உரிமையியல் நடைமுறை சட்டப்படியான நடைமுறையை பின்பற்றாமல் நடத்தப்பட்டுள்ளது.

(f) பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மட்டுமே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதற்கான வழக்கெழுமூலம் ஏதும் இல்லை. வழக்கெழு மூலத்தினை நிரூபிக்கும்விதமாக வாதி எந்தசாட்சியத்தையும் முன்னிலைபடுத்தவில்லை.

(g) நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ள வாதிகள் அவர்களது அனுபவத்தை நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். அது தொடர்பான எந்த ஆவணங்களையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. கிராம நிர்வாக அலுவலரிடமோ, நகராட்சி அலுவலரிடமோ ஆவணங்கள் எதையும் வாங்கி தாக்கல் செய்யவில்லை.

WEB COPY

(h) திருத்தப்பட்ட பிராதினை தாக்கல் செய்துள்ள வாதிகள் இவ்வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பே தாவா சொத்து 27.3.2013 அன்று பிரதிவாதிகளால் வாங்கப்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொண்டுள்ளனர். எனவே, வாதிகள் விளம்புகை பரிகாரத்துடன் இணைத்த உறுத்துக்கட்டளை பரிகாரத்தினை கோரி புதுவழக்குதான் தாக்கல் செய்யவேண்டும் என்பதை மாண்புமிகு உச்ச நீதிமன்றம் Anathula Sudhakar Vs. P.Buchi Reddy (Dead) LRs. & Ors. **(2008) 4 SCC 594** என்ற வழக்கில் சொத்துரிமை மறுக்கப்படும்போது விளம்புகை பரிகாரம் முக்கியமானது என கூறியுள்ளது.

(i) வாதிகள் தாவா சொத்து ( Public Purpose ) பொது பயன்பாட்டுக்கான சொத்து என வாதிடும்பட்சத்தில் அதன் உரிமையாளரான மயிலாடுதுறை நகராட்சிதான் வழக்கை தாக்கல் செய்யமுடியும் அல்லது மயிலாடுதுறை நகராட்சியின் நிர்வாக அதிகாரியை இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சேர்த்திருக்கவேண்டும். எனவே, இவ்வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல.

(j) இவ்வழக்கிற்கான வழக்கெழுமூலம் அக்டோபர் 2013 அன்று பிரதான்பாபுக்கு எதிராக ஏற்பட்டுள்ளதாக வாதிகள் தெரிவித்துள்ளனர். அதற்கான சாட்சிகள் ஏதும் முன்னிலைபடுத்தப்படவில்லை. தனி பிரதிவாதியாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் வழக்கெழு

மூலத்தினை மாற்றம் செய்து திருத்தப்பட்ட பிராதினை தாக்கல் செய்ய உரிமையியல் நடைமுறை சட்டத்தில் வழிவகை இல்லை. ஆனால், வாதிகள் திருத்தப்பட்ட பிராதில் வழக்கெழு மூலத்தினை திருத்தியுள்ளனர். ஆனால் அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல.

(k) வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில்,

"(1) நாச்சிமுத்து நகரில் இன்னைய தேதியில் 25 குடும்பங்கள் இருக்கிறது. அத்தனைபேரும் உறுப்பினர்களாக இருக்கிறார்களா என்றால் கிடையாது. 11 பேர்தான் இருக்கிறார்கள். (2) எங்கள் சங்கம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்ற தேதி ஞாபகமில்லை. (3) இதுவரையில் சங்க முகவரியை மாற்றவில்லை. (4) இ.சி.3219 ராஜேந்திரன் என்பவர் விண்ணப்பித்து என்னிடம் கொடுத்தார், நாச்சிமுத்து முதலியார் செத்து பல வருடங்கள் ஆகிறது. ஆக செத்துப்போனவர் பெயரில் விண்ணப்பித்து வாங்கியுள்ளேன் என்றால் இருக்கலாம். (5) வழக்கு போடும்போது தாவா சொத்து பழனிவேல் வசம் உள்ளதா என எனக்கு தெரியாது. அவர் குடும்ப உறுப்பினர்கிட்ட இருக்கும்விபரம் இந்த வழக்கு போது தெரியும். (6) இ.சி.13 ஆவணங்களை மறைத்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். (7) சங்க கூட்டத்திற்கு கலைச்செல்வன் வந்திருந்தாரா என்றால் அவர் வெளிநாட்டில் இருந்தார். (8) வரைபடத்தில் பப்ளிக் பர்பஸ் என்றுதான் இருக்கிறது. பார்க் என்று கிடையாது. (9) இந்த கட்சியே பார்க்குக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். (10)தாவா இடத்தின் சர்வே நம்பர் எனக்குதெரியாது. (11) தாவா சொத்து நகரவாசிகளுக்குச் சொந்தமானது என்று கிரயம் எதுவும் வாங்கவில்லை. (12) வா.சா.ஆ.4 ஆவணம் நகரவாசிகளுக்கு சொந்தமானது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. (13) நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்து பூங்காவிற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளதா என்றால் அது தவறு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (14) சங்கத்தில் 23 உறுப்பினர்கள் உள்ளார்கள் (15) அதன் அடிப்படையில் நீதிமன்றத்தில் எதற்காக உறுத்துக்கட்டளை பரிகாரம் வாங்கினேன் என்றால் எனக்கு தெரியவில்லை, அந்த இடைக்கால உறுத்துக்கட்டளை நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது என்றால் அது பற்றி தெரியவில்லை. (16)பப்ளிக் பர்பஸ் என்றால் எனக்கு தெரியாது. " என்று சாட்சியமளித்துள்ளார்.

வா.சா.1ன் சாட்சியம் வழக்குரைக்கு எதிராக உள்ளது. வாதி ( Public Purpose ) பொது பயன்பாட்டிற்காக குறிப்பிடப்பட்டுள்ள இடத்தினை நாச்சிமுத்து நகரவாசிகள் யாரும் விலைக்கு வாங்கவில்லை என்று ஒப்புக்கொண்டுள்ளார். வாதி சங்கத்திற்கும், தாவா சொத்துக்கும் எந்தஉரிமையும் இல்லை. வாதிக்கு தாவா சொத்தின் புல எண் தெரியவில்லை. ( Public Purpose ) பொது பயன்பாடு என்பதன்

WEB COPY

அர்த்தமும் புரியவில்லை. தற்சமயம் வாதி சங்கத்தில் 11 நபர்கள் மட்டும் உறுப்பினர்களாக உள்ளதை ஒப்புக்கொண்டுள்ளார். 16 உறுப்பினர்கள் நீக்கப்பட்டுள்ளனர். அதற்கான விளக்கம் கொடுக்கப்படவில்லை. எனவே வாதி சங்கம் பொய்யாக பிரதிவாதியின் அனுபவத்தை தொந்தரவு செய்வதற்காக மட்டுமே உருவாக்கப்பட்டுள்ளது.

வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில்,
"(1) 1990 முதல் சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறேன். (2)சங்கக் கட்டிடம் வாடகை கட்டிடத்தில் உள்ளதா, சொந்த கட்டிடத்திற்குரியதா என்றால் தெரியாது. (3) சங்க கூட்டம் எங்கு நடத்தப்படும் என்றால் தலைவர் கார்த்திகேயன் வீட்டில் நடக்கும். (4) சங்க கூட்டம் நடத்தப்படுவதாக ஏதாவதுகடிதம் வந்ததா என்றால் வரவில்லை (5) எந்த சர்வே நம்பருக்கு வழக்கு நடத்தப்படுகிறது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது (6) சங்கத்தில் எத்தனைபேர் உறுப்பினர்கள் இப்போது எத்தனைபேர் இருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது.(7) கலைச்செல்வன் என்பவர் சங்கத்தில் உறுப்பினர் கிடையாது. (8) வில்லங்கச் சான்று வழக்கு போடுவதற்காக நான் வாங்கினேன்.(9) மீண்டும் சொல்கிறேன் வழக்கின் முழு விபரம் தெரியாது (10) திருமண உதவித்திட்டம், கல்வி வசதி முதியோருக்கு உதவி செய்தல் போன்றவற்றை எதுவும் எங்கள் சங்கம் செய்யவில்லை என்றால் சரிதான். "
வாதி சங்கமானது 21.10.2013 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், வா.சா.2 1990ம் ஆண்டிலிருந்து உறுப்பினராக உள்ளதாக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்கண்ட சாட்சியத்தின்மூலம் பிரதிவாதிகளின் அனுபவத்தினை தொந்தரவு செய்யவேண்டும் என்பதற்காகவே இவ்வாதி சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது என்து தெளிவாக தெரியவருகிறது.

வா.சா.3 நகராட்சி சார்ஆய்வாளர் தனது குறுக்கு விசாரணையில்,
"(1) எங்கள் அலுவலக கோப்பு படி மேற்படி இடம் பட்டா மாற்றம் செய்துள்ளோம். மேற்கண்ட இடம் அரசுக்கு சொந்தமான இடமாக இருந்தால் எங்களது வரைபடத்தில் அது குறிப்பு இருந்திருக்கும் என்றால் இல்லை. வா.சாஆ.14ல் மேற்கண்ட இடம் பப்ளிக் பர்பஸ் இடம் இல்லை என்றுதான் அனுப்பி உள்ளோம். " என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்கண்ட சாட்சியத்தின் மூலம் தாவா சொத்து வாதி சங்கம் கூறுவதுபோல் பொது சொத்து அல்ல என்பது விளக்கப்பட்டுள்ளது.

வா.சா.4 தனது குறுக்கு விசாரணையில்,
(1)எங்களது வரைபடத்தில் பப்ளிக் ப்ளேஸ் என்றுதான் இருக்கிறது. பப்ளிக் பர்பஸ் என்று கிடையாது. (2) பப்ளிக் பர்பசில் உள்ள இடங்களை

WEB COPY

லே அவுட் அனுமதி ஆனவுடன் உள்ளாட்சித்துறைதான் பராமரிக்கவேண்டும். (3) வழக்கிற்கு பிறகுதான் இந்த ஆய்வு செய்தேன். மனுதாரருக்கும் தகவல் கொடுக்கவில்லை. எதிர்மனுதாரருக்கும் தகவல்கொடுக்கவில்லை. (4) நான் ஆய்வு செய்யும்போது யாரும் கிடையாது. (5) வரைபடத்தில் பப்ளிக் பர்பஸ் கொடுக்கப்பட்ட இடம் 9600 சதுர அடியாகும். (6) நான் ஆய்வு செய்யும்போது விளையாட்டுத் திடல் என்று எதற்கு சொன்னேன் என்றால் பக்கத்தில் இருந்தவர்களை கேட்டு சொன்னதால்தான் சொன்னேன், நான் அந்த ஏரியாவில் இருக்கும் 1 நபரிடம் விசாரித்தேன். அவர் பெயர் நான் கேட்கவில்லை, நான் வாக்குமூலம் ஏதும் வாங்கவில்லை. (7) நான் ஆய்வு செய்யும்போது நகராட்சி சர்வேயருக்கோ, வட்டார சர்வேயருக்கோ எந்ததகவலும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வரைபடம் உள்ள இடத்தை ஆட்டோகாரர்தான் அடையாளம் காட்டினார். எனது அலுவலகத்திற்கு நீதிமன்றத்தின் வழியாக சம்மன் வந்துள்ளது, அந்த சம்மனில் சாட்சி சொல்ல டெப்டி டைரக்டர் எழுத்து மூலமாக அங்கீகாரம் கொடுக்கவில்லை, வாய்மொழியாக கொடுத்தார்." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

WEB COPY

எனவே, வா.சா.4 தாவா சொத்தினை எதிர்மனுதாரருக்கும், நிர்வாக அதிகாரிகளுக்கும் , நகராட்சி அதிகாரிகளுக்கும் அறிவிப்பு ஏதும் கொடுக்காமல் பார்வையிட்டுள்ளார். தாவா சொத்தினை ஆட்டோ ஓட்டும் நபர் காண்பித்துள்ளார். அதன் அடிப்படையில் தாவா சொத்தினை public place என்று பதிவு செய்துள்ளார். இவரது சாட்சியத்தின்மூலம் தாவா சொத்து யாருடைய வசத்திலும், அனுபவத்திலும் உள்ளது என்று உறுதி செய்ய இயலாது. இவர் உரிய அதிகாரிகளுக்கு அறிவிப்பு கொடுக்காமல் விசாரணை செய்துள்ளதால் இவரது விசாரணை செல்லத்தக்கதல்ல.

பி.வா.சா.3 தனது குறுக்கு விசாரணையில்,

" (1)கார்த்திகேயனை தேர்ந்தெடுக்க தீர்மானப்புத்தகம் நகல் உள்ளதா என்றால் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட போது கார்த்திகேயன் தலைவராக இருந்தார். அதன்பின்பு 3வருடங்கள் தலைவராக தொடர்ந்தார். 30.09.2016 அன்று தேர்ந்தெடுக்கப்பட்டார். 24.1.2017 எங்களிடம் கொடுக்கப்பட்டது. தற்சமயம் சங்கத்தில் 11 பேர் மட்டுமே உறுப்பினராக உள்ளார்கள் என்றால் சரிதான். வெளிநாட்டில் தொழில் செய்து வருபவர்களை சங்க உறுப்பினர்களில் இருந்து நீக்கிவிட்டார்கள் என்றால் சரிதான். சங்கம் இன்சாட்வெண்டாக இருந்தால் அது விதிப்படி ரத்து செய்யப்படலாம் என்றால் சரிதான். ரூ.11950/- நட்ட கணக்கில் இயங்குவதாக நட்ட கணக்கு கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். "என்று சாட்சியம் அளித்துள்ளார்.

வாதிகள் சங்கத்தின தீர்மான நகல்களை பதிவாளருக்கு கொடுக்கவில்லை என்பது தெளிவாகிறது. அதனால் முதல்வாதி வாதி சங்கத்தின்

நியமிக்கப்பட்ட தலைவராக பிரிவு 15(3) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டப்படி கருதப்பட மாட்டார். எனவே, சங்கத்தின் தலைவர் என்ற முறையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. வாதி சங்கம் 21.10.2013 அன்றுதான் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2 முதல் 5 வரையுள்ள பிரதிவாதிகள் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் 27.03.2013ல் இருந்து தாவா சொத்தின் அனுபவத்தில் உள்ளனர். எனவே, வாதிகள் எதிரிடை பாத்திய உரிமையும் கோர இயலாது. மேலும், 39 வருடங்களாக தாவாசொத்து ( Public Purpose ) பொது பயன்பாட்டு இடமாக பயன்படுத்தப்படவில்லை. எனவே, இந்த நோக்கம் மூன்று வருடங்கள் முடிவடைந்தவுடன் செயல்படாது என பிரிவு 38 தமிழ்நாடு நகர் மற்றும் நகர்புற அமைப்பு சட்டம் தெரிவித்துள்ளது. 1978 முதல் இன்றைய தேதிவரை அரசு துறையினராலோ, தனிப்பட்ட மற்றும் தனியார் துறையினராலோ பொது நோக்கத்திற்காக மேற்கண்ட தாவா சொத்து கேட்கப்படவில்லை. தாவா சொத்து ( Public Purpose ) பொது பயன்பாட்டு சொத்தாக கருதப்பட்டாலும் அது வாதிகள் சங்கத்திடம் ஒப்படைக்கப்படவில்லை. இவ்வழக்கு பொது நோக்கு வழக்கு அல்ல. 27உறுப்பினர்களை கொண்ட சங்கம் மட்டுமே பொது மக்களாக கருத இயலாது. எனவே, வாதி சங்கம் தாவா சொத்தின் வசம் மற்றும் சுவாதீனத்தை கோர இயலாது. தாவா சொத்து வாதிகளின் அனுபவத்தில் இருந்ததற்கு எந்த ஆவணத்தையும் வாதிகள் தாக்கல் செய்யவில்லை.

முனிசிபல் சர்வேயர் தனது சாட்சியத்தில், தாவா சொத்து பிரதிவாதிகளின் வசத்திலும், அனுபவத்திலும் உள்ளதாக தெரிவித்துள்ளார். மயிலாடுதுறை சிறப்பு வட்டாட்சியர் பிதிவாதிகளுக்கு ஆதரவாக Rc.No.360/2014 Dated 20.3.2015ன் மூலம் பட்டா வழங்கியுள்ளார். அதன்மூலம் தாவா சொத்தின் அனுபவம் பிரதிவாதிகள்வசம் உள்ளது என்பது நிரூபணம் ஆகிறது. மேலும் வேலி அடைப்புடன் அனுபவிக்கப்பட்டு வருகிறது. வரி விதிப்பு எண்.10028 மற்றும் 10029ன் மூலம் பிரதிவாதிகள் தாவா சொத்துக்கான வரியினை இன்றைய தேதிவரை செலுத்தி வருகிறார்கள்.

பதிவு செய்யப்பட்ட 13 ஆவணங்கள் மூலம் தாவா சொத்து பிரதிவாதிகள் மற்றும் அவர்களின் உரிமை முன்னவர் அனுபவத்தில் வந்துள்ளது என்பது தெளிவாக நிரூபணம் ஆகியுள்ளது. வாதிகள் தாவா சொத்து விளையாட்டு மைதானம் என்று கூறியுள்ளனர். விளையாட்டு மைதானம் என்பது ( Public Purpose ) பொது பயன்பாடு என்ற சொல்லின் பொருளுக்குள் அடங்காது. வாதிகளால் திருத்தி

WEB COPY

அமைக்கப்பட்ட மனைப்பிரிவின் வரைபடம் தாக்கல் செய்யப்படவில்லை. 13 ஆவணங்களின் பதிவுகள் மறைக்கப்பட்டு இரண்டு வில்லங்கச் சான்றிதழ்கள் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இரண்டு வில்லங்கச் சான்று ஆவணங்களும் சட்டப்படி தகுதி அற்றது ஆகும்.

வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், " (1) தாவா சொத்து பழனிவேல் அனுபவத்தில் உள்ளது.(2) வழக்கு போடும்போது தாவா சொத்து பழனிவேல் வசம் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. அவர் குடும்ப உறுப்பினர்கிட்ட இருக்கும்விபரம் இந்த வழக்கும்போது தெரியும். (3) இ.சி. 13 ஆவணங்களை மறைத்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். " என்று தெரிவித்ததிலிருந்து இவ்வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடியாக வேண்டியுள்ளது. "

11. **<u>எழுவினா 1 :</u>**

இருதரப்பும் கேட்கப்பட்டு சான்றாவணங்கள் மற்றும் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்ததில், தாவா சொத்து ஆதியில் நாச்சிமுத்து முதலியாருக்கு சொந்தமாக இருந்து, அது மனை பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்பதும், அதன் முதல் மனை பிரிவு அனுமதி எண்.56/78 என்பதும், மாற்றி அமைக்கப்பட்ட மனை பிரிவின் அனுமதி எண்.77/81 என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சங்கதிகள் ஆகும். கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், 56/78 மனைப்பிரிவின் வரைபடம் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மாற்றி அமைக்கப்பட்ட மனை பிரிவு எண்.77/81 தாக்கல் செய்யப்படாததால் வாதிகளின் வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றும் வாதிட்டார். மேற்கண்ட வாதம் ஏற்புடையதாக இல்லை. ஏனெனில், மாற்றி அமைக்கப்பட்ட மனைபிரிவின் அனுமதி எண்.77/81 பி.வா.சா.ஆ-35ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பி.வா.சா.ஆ-35ல் திருச்சி தஞ்சாவூர் மண்டல நகர் மற்றும் நகர்புற அமைப்பு இணை இயக்குநர் கையொப்பம் செய்து அனுமதி வழங்கியுள்ளார். அதனை ந.க.எண்.17179/78.எம்.1 மூலம் 6.2.1982ல் மாயூரம் நகராட்சி ஆணையர் அங்கீகரித்துள்ளார். எனவே, பி.வா.சா.ஆ-35தான் நாச்சிமுத்து நகர் சம்பந்தமான உண்மையான அங்கீகரிக்கப்பட்ட மனை பிரிவு வரைபடம் என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. மேற்கண்ட மனை பிரிவு வரைபடத்தில் Public

WEB COPY

Purpose (பொது பயன்பாடு) என்று ஒரு இடம் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட இடமே இத்தாவா சொத்தாகும். வழக்கின் தாவா சொத்தாக வாதிகள் 10440 சதுரடி என்று கூறியுள்ளனர். ஆனால், பிரதிவாதிகள் Public Purpose (பொது பயன்பாடு) என்று குறிப்பிடப்பட்டுள்ள இடம் 11,200 சதுரடி என்று தெரிவித்துள்ளனர். இருதரப்பினர்களுக்குமிடையே சதுரடியில் வித்தியாசம் இருப்பினும் அவர்கள் கூறும் நான்கெல்லையில் எந்த மாற்றமும் இல்லை. நான்கெல்லைகளின் அடிப்படையில் பி.வா.சா.ஆ-35ல் Public Purpose (பொது பயன்பாடு) ஆக குறிப்பிடப்பட்டுள்ள இடமே இவ்வழக்கின் தாவா சொத்தாக இந்நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

12. வாதிகளின் வழக்குப்படி Public Purpose (பொது பயன்பாடு) ஆக குறிப்பிடப்பட்டுள்ள இடம் நாச்சிமுத்து நகர் குடியிருப்புவாசிகளுக்கு பொது பயன்பட்டுக்காக ஒதுக்கப்பட்ட இடம் என்பதும், அதனை விற்பனை செய்யவோ, வீடு கட்டவோ, வேறு கட்டிடங்கள் கட்டவோ கூடாது என்பதும் ஆகும். பிரதிவாதிகளின் வழக்குப்படி, Public Purpose (பொது பயன்பாடு) ஆக குறிப்பிடப்பட்டுள்ள இடம் மூன்று வருடத்திற்குள் அதற்கான பயன்பாட்டினை எட்டவில்லை என்றால் அதனை விற்பனை செய்யும் அதிகாரம் நகரை உருவாக்கிய உரிமையாளருக்கு உள்ளது என்பதாகும். ஆனால் அதற்கான அனுமதியை நகர மற்றும் நகர்புற அமைப்பு வளர்ச்சி துறையினரிடம் பெறவேண்டும் என்று 1ம்பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ளார். பிரிவு 38 தமிழ்நாடு நகர மற்றும் நகர்புற அமைப்பு சட்டம் 1971ன்படி மூன்று வருடங்களுக்குள் Public Purpose (பொது பயன்பாடு) இடம் பொது பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றால் அதனையே அதன் உரிமையாளர் விற்பனை செய்யலாம் என்று உள்ளதாக பிரதிவாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது. மேற்கண்ட வாதம் ஏற்புடையதாக இருந்தாலும், எப்படி நாச்சிமுத்து நகர் மனை பிரிவு அனுமதி பெறப்பட்டுள்ளதோ அதேபோல் Public Purpose (பொது பயன்பாடு) ஆக ஒதுக்கப்பட்ட இடத்தினை மாற்றம் செய்து விற்பனை செய்ய

WEB COPY

வேண்டுமெனில் அதற்கான அனுமதியை இணை இயக்குநரிடம் பெற்றிருக்க வேண்டும். அதற்கான உத்தரவின் நகல் மயிலாடுதுறை நகராட்சி ஆணையருக்கு அனுப்பி இருக்கவேண்டும். ஆனால், இவ்வழக்கில் Public Purpose (பொது பயன்பாடு) என்ற இடத்தை வேறு பயன்பாட்டிற்கு மாற்றலாம் என்று இணை இயக்குநர் உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை. அப்படியான உத்தரவையும் பிரதிவாதிகள் தாக்கல் செய்யவில்லை

13. மேலும், கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், உண்மையிலேயே தாவா சொத்து Public Purpose (பொது பயன்பாடு) ஆக இருக்கும் பட்சத்தில் அதுகுறித்த வழக்கினை மயிலாடுதுறை நகராட்சிதான் தாக்கல் செய்யவேண்டுமேயொழிய வாதிகள் தாக்கல் செய்ய இயலாது என வாதிட்டார். மேற்கண்ட வாதம் ஏற்புடையதாக இல்லை. ஏனெனில், பிரிவு 2 (36) தமிழ்நாடு நகர் மற்றும் நகர்புற அமைப்பு சட்டம் 1971ன்படி Public Purpose (பொது பயன்பாடு) என்பது , *"Any purpose which is useful to the public or any clasue or section of the public "* என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் Public Purpose (பொது பயன்பாடு) ஆக ஒதுக்கப்பட்ட தாவா சொத்து பொது மக்களுக்கோ, ஒரு வகுப்பை சார்ந்தவர்களுக்கோ, ஒரு பிரிவு பொது மக்களுக்கோ பயன்படும் வகையில் இருக்கவேண்டும். எனவே, நாச்சிமுத்து நகரவாசிகளாக இருந்து கொண்டு அந்த நகருக்குள் இருக்கும் "Public Purpose" இடத்தினை உரிய சட்டப்படியான உத்தரவு ஏதும் இல்லாமல் மாற்றம் செய்ய முயற்சி செய்யும் நபரின் நடவடிக்கையை தடை செய்யும் உரிமை அந்த பகுதியில் வசிக்கும் ஒவ்வொரு நபர்களுக்கும் உள்ளது. எனவே, வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்ய தகுதியற்றவர்கள் என்று வாதிட்ட வாதத்தினை இந்நீதிமன்றம் நிராகரிக்கிறது. மேலும், கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் கட்டளை 1 விதி 8 உரிமையியல் நடைமுறை சட்டபடி மனு தாக்கல் செய்யபடாமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலை நிற்கத்தக்கதல்ல

WEB COPY

என்று வாதிட்டார். மேற்கண்ட வாதம் ஏற்புடையதாக இல்லை. ஏனெனில் வாதிகள் இந்த வழக்கை நாச்சிமுத்து நகர் குடியிருப்போர் நலசங்கத்தின் சார்பாக அதன் தலைவர் மற்றும் செயலாளர் என்ற முறையில் தாக்கல் செய்துள்ளனர். மேற்கண்ட சங்கம், சங்கங்கள் பதிவு சட்டபடி மயிலாடுதுறை மாவட்ட பதிவாளார் அலுவலகத்தில் பதிவு செய்யபட்டு தற்சமயம் வரை நடைமுறையில் இருந்து வருகின்றது என்பது மாவட்ட பதிவாளரின் சாட்சியத்தின் மூலம் தெள்ளத் தெளிவாக நிருபணம் ஆகின்றது. மேற்கண்ட சங்கம் சரிவர செயல்படவில்லை, உறுப்பினர்கள் குறைவாக உள்ளனர், இவ்வழக்கிற்காகவே சங்கம் உருவாக்கபட்டுள்ளது என்று பிரதிவாதிகள் வாதிட்டாலும் மயிலாடுதுறை மாவட்ட பதிவாளர் அலுவலக கோப்பு படி வாதி சங்கம் இன்றளவில் கலைக்கப்படாமல் நடைமுறையில் உள்ளது. எனவே வாதிகள் சங்கத்தின் தலைவர், செயலாளர் என்ற முறையில் இவ்வழக்கை தாக்கல் செய்யதுள்ளார்கள். இதனால் கட்டளை 1 விதி 8 உரிமையியல் சட்டப்பிரிவு படியான நடவடிக்கைகள் இவ்வழக்கிற்கு பொருந்தாது. ஏனெனில், இவ்வழக்கு பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்படவில்லை. சட்டமுறைபடி பதிவு செய்யப்பட்ட சங்கத்தால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட காரணத்தால் கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரால் வாதிடப்பட்ட மேற்கண்ட வாதம் ஏற்புடையதல்ல என்று நிராகரிக்கப்படுகிறது.

WEB COPY

14. மேலும், கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர், வாதிகள் சங்கம் இவ்வழக்கை தாக்கல் செய்வதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளது என்று வாதிட்டார். வழக்கை தாக்கல் செய்வதற்காக சங்கம் உருவாக்கப்பட்டதில் தவறு உள்ளதாக கூற இயலாது. நாச்சிமுத்து நகரில் வசிக்கும் ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் Public Purpose (பொது பயன்பாடு) ஆக குறிப்பிடப்பட்டுள்ள இடத்தினை மாற்றம் செய்ய முயற்சி செய்யும் நபர்களின்மீது நடவடிக்கை எடுக்க உரிமையுள்ள போது நாச்சிமுத்து நகர் குடியிருப்பு வாசிகளால் உருவாக்கப்பட்ட சங்கத்தின்மூலம் நடவடிக்கை

எடுத்துள்ளதில் தவறு ஏதும் இல்லை. எனவே, இவ்வழக்கை தாக்கல் செய்வதற்காக இச்சங்கம் உருவாகியுள்ளதால் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய இயலாது. மேலும்,

கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் தாவா தாக்கல் ஆன தேதியில் வழக்கிடை விண்ணப்ப எண். 607/2013 இல் Status quo என உத்தரவான அழைப்பானை 1ம்பிரதிவாதிக்கும் வரப்பெற்றது. ஆனால் இடைக்கால உத்தரவு நீடிப்பு செய்யப்பட்டதாக வழக்கு நாள் குறிப்பில் காணப்பட்டுள்ளது என்று வாதிட்டார். மேற்கண்ட வாதத்தின் அடிப்படையில் மேலே குறிப்பிட்டுள்ள வழக்கிடை விண்ணப்பதினையும், அதன் நாட்குறிப்பு உத்தரவுகளையும் பரிசீலனை செய்ததில், 29.10.2013 அன்று இந்நீதிமன்றத்தால் Status quo உத்தரவு மட்டுமே 06.11.2013 வரை வழங்கப்பட்டது. அதனை பின்னிட்டு 28.11.2013 வரை மேற்கண்ட இடைக்கால உத்தரவு நீடிப்பு செய்யப்பட்டுள்ளது. Status quo என்பது இந்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட இடைகால உத்தரவு தான், எனவேதான் அது நீடிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட உத்தரவு நீட்டிப்பு செய்யப்பட்டதால், தற்காலிக உறுத்துக்கட்டளை வழங்கி அதில் இந்நீதிமன்றதால் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது என்று பிரதிவாதிகள் தரப்பில் தவறான புரிதலை ஏற்படுத்தி உள்ளது. மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மேற்கண்ட வாதத்திற்கு முகாந்திரம் இல்லை என்று நிராகரிக்கப்படுகிறது. மேலும், மேற்கண்ட உத்தரவில் பிரதிவாதிகள் திருப்தி அடையவில்லை எனில் அதன்பேரில் சீராய்வு மனு தாக்கல் செய்து இருக்கலாம். ஆனால், அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் தற்போது மேற்கண்ட வாதத்தை எடுத்துரைப்பது ஏற்புடையதல்ல.

WEB COPY

15. மேலும், கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்துடன், **2008(4) SCC 594** Anathula Sudhakar Vs. P.Buchi Reddy (Dead) LRs. & Ors. என்ற மேற்கோள் தீர்ப்பினை மேற்கோள் காட்டி வாதிட்டார். மேற்கண்ட தீர்ப்புரையில், ஒருவர் சொத்துரிமை மறுக்கப்படும்போது விளம்புகை பரிகாரம் கோரவேண்டும் என்று மாண்புமிகு உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இவ்வழக்கில்

வாதிகளுக்கு தாவா சொத்தின் மீது சொத்துரிமை ஏதும் இல்லை. வாதிகளுக்கு தாவா சொத்தின்மீது பயன்பாட்டு அனுபவ உரிமை மட்டுமே உள்ளது. ஏனெனில் Public Purpose (பொது பயன்பாடு) ஆக குறிப்பிடப்பட்டுள்ள தாவா சொத்தை வாதிகள் தனித்தனியாகவோ, கூட்டாகவோ, சங்கத்தின் மூலமோ விலைக்கு வாங்கவில்லை. அது நகரவாசிகளின் பொது பயன்பாட்டிற்காக உள்ளது. இவ்வழக்கை நாச்சிமுத்து முதலியாரோ அல்லது அவரது வாரிசுகளோ தாக்கல் செய்திருந்து அதில் சொத்துரிமையை பிரதிவாதிகள் மறுத்திருந்தால் அவ்வழக்கில் விளம்புகை பரிகாரம் கேட்டிருக்கவேண்டும். ஆனால், இவ்வழக்கு அதுபோன்ற வழக்கு அல்ல. மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் வாதிகள் விளம்புகை பரிகாரம் கோராமல், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ளது நிலைநிற்கத்தக்கதே என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, மேற்கண்ட மேற்கோள் தீர்ப்புரையின் பொருண்மை மற்றும் சங்கதிகள் நம்மிடையேயுள்ள இவ்வழக்கிற்கு பொருந்தி அமையவில்லை. மேலும், கற்றறிந்த 6 முதல் 10 வரை உள்ள பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் **(2010)11 S.C.R.1** என்ற மேற்கோள் தீர்ப்புரையை மேற்கோள் காட்டி வாதிட்டார். மேற்கண்ட தீர்ப்புரையின் பொருண்மை மற்றும் சங்கதிகள் நம்மிடையே உள்ள இவ்வழக்கிற்கு பொருந்தி அமையவில்லை. ஏனெனில், மேற்கண்ட தீர்ப்புரையில் பொது பயன்பாட்டுக்காக ஒதுக்கபட்ட இடம் மறு கட்டமைப்புக்கு உட்படவேண்டும் என்று Trust-ஆல் விண்ணப்பம் செய்யப்பட்டு, அதன் பேரில் அரசாணை எண்.244 தேதி 23.03.1994 நிறைவேற்றபட்டு வேறு உபயோகத்திற்கு பொது பயன்பாட்டில் இருந்த இடத்தை உபயோகபடுத்தலாம் என உத்தரவு அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் அது போன்ற உத்தரவு நம்மிடையே உள்ள இவ்வழக்கில் ஏற்படவில்லை. அதற்கான விண்ணப்பமும் பிரதிவாதிகளால் அரசு அலுவலர்களிடம் கொடுக்கப்படவில்லை. அதே போன்று **W.A.No.218/2011** ஐ சேர்ந்த சட்ட மேற்கோள் தீர்ப்புரையை மேற்கோள் காட்டி வாதிடப்பட்டது. மேற்கண்ட தீர்ப்புரையிலும் அரசாணை எண்.219 தேதி 20.10.2008 நிறைவேற்றபட்டுள்ளது.

WEB COPY

எனவே மேற்கண்ட இரண்டு தீர்ப்புகளின் பொருண்மை மற்றும் சங்கதிகள் நம்மிடையே உள்ள இவ்வழக்கில் பொருந்திஅமையவில்லை.

16. மேலும் 6 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் **(2008) 1 M.L.J. 1285** என்ற மேற்கோள் தீர்ப்புரையை மேற்கோள் காட்டி வாதிட்டார் மேற்கண்ட தீர்ப்புரையில் Community hallஆக ஒதுக்கபட்ட இடத்தினை விற்பனை செய்வது குறித்து ந.க.எண். 4172/2006 மற்றும் ந.க.எண்.3701/05 ஆகியவைகள் மூலம் உத்தரவு பிறப்பிக்கபட்டுள்ளது. ஆனால் நம்மிடையே உள்ள இவ்வழக்கில் தாவா சொத்து பொது பயன்பாட்டிற்குரிய சொத்து என அனுமதி வழங்கபட்டுள்ளது. மேலும் பொது பயன்பாடு என்ற வகைபாடு மாற்றபட்டதற்கான உத்தரவு எதுவும் அரசாங்கத்தால் பிறப்பிக்கப்படவில்லை. எனவே மேற்கண்ட தீர்ப்புரையின் பொருண்மை மற்றம் சங்கதிகள் நம்மிடையே உள்ள இவ்வழக்கின் பொருண்மை மற்றும் சங்கதிகளுடன் பொருந்தி அமையவில்லை.

WEB COPY

17. மேலும், கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், மூன்று வருடங்களுக்கு மேல் பொது பயன்பாட்டிற்கான இடம் பயன்படுத்தப்படவில்லை என்றால் அதை மாற்றி அமைக்க உரிமையாளருக்கு உரிமையுள்ளது என்று வாதிட்டார். மேற்கண்ட வாதம் பிரிவு 38 தமிழ்நாடு நகர் மற்றும் நகர்புற அமைப்பு சட்டப்படி ஏற்புடையதாக இருந்தாலும், நாச்சிமுத்து நகரை உருவாக்கிய நாச்சிமுத்து முதலியார் 1978ல் நகரை உருவாக்கி, 1981ல் அதனை மாற்றியமைத்தும் உள்ளார். அவர் 2004ம் ஆண்டுதான் இறந்துள்ளார். உண்மையிலேயே பொது பயன்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட இடத்தினை மாற்றி அமைக்கவேண்டும் என நாச்சிமுத்து முதலியார் நினைத்திருந்தாலும் 1981ல் இருந்து மூன்றுஆண்டுகள் கழித்து 1985ல் அதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருக்கலாம். ஆனால், அவர் இறக்கும்வரை மேற்கண்ட இடத்தின் தன்மையை மாற்றம் செய்வதற்கான முயற்சி ஏதும் செய்யவில்லை. இதிலிருந்து நாச்சிமுத்து நகரை உருவாக்கிய நாச்சிமுத்து முதலியாரின்

உயரிய எண்ணம் நாச்சிமுத்து நகரவாசிகள் தாவா சொத்தினை பொது பயன்பாட்டிற்காக பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றுதான் உள்ளது. ஆனால், அவர் இறப்பிற்கு பின்பு அவரது சட்டப்படியான வாரிசுகள் நகர் மற்றும் நகர்புற அமைப்பு துறையினரிடம் அனுமதி பெறாமல் 2009ம் ஆண்டு தாவா சொத்திற்கான சொத்துரிமை மாற்றி அமைக்கப்பட்டுள்ளனர். மேற்கண்ட கிரய சாசனம் பி.வா.சா.ஆ.13ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில், 739/1980 ஆவணமாக 31.07.1980 தேதியிட்ட குடும்ப பாக ஆவணம் ஏற்பட்டது என காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட குடும்ப பாக ஆவணத்தின் அசலையோ, சான்றிட்ட நகலையோ பிரதிவாதிகள் தாக்கல் செய்யவில்லை. மேற்கண்ட ஆவணத்தை தாக்கல் செய்திருந்தால்தான் உண்மையிலேயே தாவா சொத்து யாருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது? அல்லது யாருக்கும் ஒப்படைக்கப்படவில்லை? என்பது குறித்த நிலை இந்நீதிமன்றத்திற்கு தெரியவந்திருக்கும். பி.வா.சா.ஆ-1 முதல் பி.வா.சா.ஆ.35 வரை தாக்கல் செய்துள்ள பிரதிவாதிகள் வேண்டுமென்றே 31.07.1980 தேதியிட்ட குடும்ப பாக ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

WEBCOPY

18. மேலும், உண்மையிலேயே 1980ல் அதுபோன்ற குடும்ப ஆவணம் இருக்கும்பட்சத்தில் அதன் பின்னிட்டு 1981ல் நாச்சிமுத்து நகர் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. எனவே, பி.வா.சா.ஆ.35ன் அடிப்படையில் நாச்சிமுத்து நகரினை உருவாக்கிய நாச்சிமுத்து முதலியார் இறுதியாக நாச்சிமுத்து நகரை 1981ல் வடிவமைத்துள்ளார் என்பது தெளிவாக நிரூபணம் ஆகிறது. மேலும், அதில் தாவா சொத்தினை Public Purpose என தெளிவாக குறிப்பிட்டுள்ளார். பி.வா.சா.ஆ-13 1980ல் ஏற்பட்ட பாக ஆவணத்தின் அடிப்படையில் ஏற்பட்டுள்ளதால் மேற்கண்ட பி.வா.சா.ஆ-13ன் நம்பகத் தன்மை குறித்து பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் எடுத்துரைக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

19. பி.வா.சா.ஆ-13ன் அடிப்படையில் பி.வா.சா.ஆ-32 பரிமாற்று ஆவணமமும் மற்றும் பி.வா.சா.ஆ-33 சொத்து கிரய ஆவணமும் ஏற்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ-13 குறித்த சட்டதகுநிலையே நிரூபணம் ஆகாத நிலையில் பி.வா.சா.ஆ-32, பி.வா.சா.ஆ-33 ஆகியவைகளை சட்டப்படியான ஆவணமாக கருத இயலாது. பி.வா.சா.ஆ-13, பி.வா.சா.ஆ-32, பி.வா.சா.ஆ-33 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை கோரப்படாததால் இவ்வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்ற வாதத்தினை பிரதிவாதிகள் எடுத்துரைத்தால் அது ஏற்புடையதல்ல. ஏனெனில், விளம்புகை பரிகாரத்தினை மயிலாடுதுறை நகராட்சி மட்டுமே தாவா சொத்து குறித்து கோர இயலும். இவ்வழக்கின் வாதிகள் உறுத்துக் கட்டளை பரிகாரம் மட்டுமே கோரியுள்ளனர். உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ள வாதிகளுக்கு ஆதரவாக உறுத்துக்கட்டளை வழங்கவேண்டுமென்றால் அச்சொத்தின் அசல் உரிமையாளாருக்கு எதிராக வழங்க இயலாது. அந்த கோணத்தில் Public Purpose (பொது பயன்பாடு) ஆக குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கு 2 முதல் 5 வரையுள்ள பிரதிவாதகள் உரிமையாளர்கள் என்று கூறியுள்ளதால் அவர்களின் சொத்துரிமை குறித்த நம்பகத் தன்மையை ஆராயவேண்டிய நிலை இந்நீதிமன்றத்திற்கு ஏற்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், பி.வா.சா.ஆ-13, பி.வா.சா.ஆ-32, பி.வா.சா.ஆ-33ஐ பரிசீலனை செய்ததில், அவைகள் நம்பகத்தன்மை அற்றதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

WEB COPY

20. மேலும், கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், பிரதிவாதிகள் தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்து வருவதற்கு ஆதரவாக பிரதிவாதிகளுக்கு தனி வட்டாட்சியரால் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தான காலிமனைக்கு மயிலாடுதுறை நகராட்சியால் பிரதிவாதிகளிடமிருந்து வரி வாங்கப்பட்டுள்ளது என்றும் வாதிட்டு, அதனால் தாவா சொத்தின் வசமும், அனுபவமும் 2 முதல் 5 பிரதிவாதிகளிடம் உள்ளதால் வாதிகள் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்று வாதிட்டார். மேற்கண்ட வாதம் ஏற்புடையதாக இல்லை. ஏனெனில், பி.வா.சா.ஆ-22 பட்டாமாறுதல் உத்தரவு 20.03.2015 அன்று, மயிலாடுதுறை

தனி வட்டாட்சியரால் வழங்கப்பட்டுள்ளது. அந்த உத்தரவினை இவ்வழக்கு நிலுவையில் இருப்பது குறித்து தெரிவித்தும் தனி வட்டாட்சியர் வழங்கியுள்ளார் . அவரது செய்கை ஏற்புடையதாக இல்லை. ஏனெனில், அவரது செயல்முறைகள் உத்தரவில் வாதிகள் விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்ற ஒரு காரணத்தை சுட்டிக்காட்டியுள்ளார். எந்த வழக்கிற்கும் விளம்புகை பரிகாரம் வழங்கவேண்டும், எந்த வழக்கிற்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டும் என்பதை முடிவு செய்யவேண்டியயது நீதிமன்றத்தின் பணியாகும். அதனை தன் கையில் எடுத்துக் கொண்டு தனி வட்டாட்சியர் செயல்பட்டுள்ளார் என்பது தெளிவாக தெரியவருகிறது.
மேலும், மேற்கண்ட செயல்முறை உத்தரவு வழக்கு நிலுவையில் உள்ளபோது வழங்குவதால் அதற்கு சட்ட தகுநிலை இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அதன் பின்னிட்டு வழங்கப்பட்ட பட்டாக்களும், அதன்பின்னிட்டு நகராட்சியால் 2 முதல் 5 வரையுள்ள பிரதிவாதிகளிடமிருந்து வசூல் செய்யப்பட்டுள்ள காலி மனை வரியும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

WEB COPY

21. மேலும், பி.வா.சா.ஆ-13 மற்றும் பி.வா.சா.ஆ-33 ஆகியவற்றை பரிசீலனை செய்ததில், அதில், பிரதிபிரயோஜனத்திற்காக பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுக்கப்பட்டு பற்று ஆகிவிட்டதான வாசகங்கள் எழுதப்பட்டுள்ளது. உண்மையிலேயே ஒரு சொத்தின் சொத்துரிமை மாற்றம் செய்யப்படவேண்டுமென்றால் அதற்கான தொகை பத்திர பதிவுக்கு முன்பாகவோ அல்லது பத்திரம் பதிவு செய்யும் தேதியிலோ செலுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இவ்வழக்கில் ஏற்பட்டுள்ள பி.வா.சா.ஆ-13 மற்றும் பி.வா.சா.ஆ-33 ஆகிய ஆவணங்களில் தாவா சொத்திற்கான பிரதிபிரயோஜனமாக பிராமிசரி நோட்டு எழுதி கொடுக்கப்பட்டுள்ளது. கடனுறுதிச்சீட்டின் மூலம் தொகை பற்றாகாது, அது கடன்தொகையால் எனவே தக்க பிரதிபிரயோஜனத்தின் அடிப்படையில் பி.வா.சா.ஆ-13 மற்றும் பி.வா.சா.ஆ-33 ஆகிய ஆவணங்கள் ஏற்படவில்லை என்பது நிரூபணம் ஆகிறது. மேற்கண்ட ஆவணங்கள் Public Purpose (பொதுபயன்பாடு)ஆக இருந்தசொத்தினைஅபகரிக்கவேண்டும் என்ற கெட்டஎண்ணத்தில்

தயாரிக்கப்பட்டுள்ளது என்பது தெள்ளத்தெளிவாக நிரூபணம் ஆகிறது. எனவே, 2 முதல் 10 வரையுள்ள பிரதிவாதிகளை தாவா சொத்தினை வாங்கிய (Bonafide Purchaser) நல்லெண்ணத்துடன் சொத்தை வாங்கிய நபராக கருத இயலாது. மேலும், " வாங்குபவனே விழித்திரு " (Caveat Emptor ) என்கிற சட்ட விதியின்படி Public Purpose (பொது பயன்பாடு) ஆக உள்ள இடத்தினை பி.வா.சா.ஆ-13 மூலம் 6 முதல் 10 வரையுள்ள பிரதிவாதிகள் விழிப்புடன் வாங்கியிருக்கக் கூடாது. அதேபோல் 6 முதல் 10 வரையுள்ள பிரதிவாதிகளிடமிருந்து சொத்துரிமையை 2 முதல் 5 வரையுள்ள பிரதிவாதிகள் விழிப்புடன்ட பெற்றிருக்கக் கூடாது. இவர்கள் அனைவரும் சொத்தினை வாங்கும்போது விழித்து இல்லாமல் தற்சமயம் தாவா சொத்து பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மூலம் சொத்துரிமை பெற்றுவிட்டதாகவும் அதற்கு தாங்கள் உரிமையாளர்கள் என்றும் வாதிடும் வாதத்தினை இந்நீதிமன்றம் ஏற்க இயலாது.

WEB COPY

22. மேலும், இவர்கள் தங்கள் வாதுரையில், Public Purpose (பொது பயன்பாடு) என்ற இடத்தினைத்தான் தாங்கள் வாங்கியுள்ளோம் என்று ஒத்துக்கொண்டுள்ளனர். ஆனால் Public Purpose (பொது பயன்பாடு) என்ற இடத்திற்கு அவர்கள் ஒரு விளக்கத்தினை கொடுக்கின்றனர். ஆனால் அவர்கள் கொடுக்கும் விளக்கம் சரியானது அல்ல என்பது வா.சா.4ன் சாட்சியம் மற்றும் அவர் மூலம் குறியீடு செய்யப்பட்ட சா.சா.ஆ-1ன் மூலம் நிரூபணம் ஆகிறது. அதனை மறுக்கும் விதத்தில் பிரதிவாதிகள் "Public Purpose" என்பதன் பொருளை விளக்கும்விதத்தில் ஆவணங்களையோ, சாட்சியங்களையோ முன்னிலைபடுத்தவில்லை. எனவே Public Purpose (பொது பயன்பாடு) என்று தெரிந்தும் 2 முதல் 10 வரையுள்ள பிரதிவாதிகள் தாவா சொத்தினை உரிமை மாற்றம் பெற்றுள்ளார்கள் என்பது தெள்ளத்தெளிவாக நிரூபணம் ஆகிறது. அதன் அடிப்படையிலும் இவர்கள் (Bonafide Purchaser) நல்லெண்ணத்துடன் சொத்தை வாங்கிய நபராக கருத முடியாது.

23. மேலும், வா.சா.4ன்மூலம் சா.சா.ஆ-1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த சா.சா.ஆ-1ல், தாவா சொத்து பொது பயன்பாட்டிற்குரிய சொத்து என்றும், அது மேற்படி நகர் மக்களுக்கு மட்டுமே பயன்படவேண்டியது என்றும், அதனை விற்பனை செய்ய யாருக்கும் அதிகாரம் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்து நாச்சிமுத்து நகர் குடியிருப்புவாசிகளுக்கு பொது பயன்பாட்டிற்கு நாச்சிமுத்து நகரை உருவாக்கிய நாச்சிமுத்து முதலியாரால் விடப்பட்டுள்ளது என்பது தெள்ளத்தெளிவாக நிரூபணம் ஆகிறது. கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர், வா.சா.4 யாருக்கும் அறிவிப்பு கொடுக்காமல் தன்னிச்சையாக சென்று இடத்தினை பார்வையிட்டுள்ளார், அதனால் அவரது சாட்சியம் நிலைநிற்கத்தக்கதல்ல என்று வாதிட்டார். மேற்கண்ட வாதம் ஏற்புடையதாக இல்லை. ஏனெனில், தாவா சொத்து அமைந்துள்ள நாச்சிமுத்து நகருக்கு அனுமதி வழங்கிய அலுவலத்தை சேர்ந்த நபர்தான் தாவா சொத்தினை பார்வையிட்டுள்ளார். அவர் பார்வையிட்டுதான் இந்த அறிக்கையை தாக்கல் செய்யவேண்டும் என்ற அவசியம் இல்லை. அவர்கள் அலுவலகத்தில் உள்ள ஆவணங்களின் அடிப்படையிலேயே "Public Purpose" என்ற இடத்தின் தன்மையை கூறமுடியும். ஆனால், தாவா சொத்தின் தற்போதைய நிலை எவ்வாறு உள்ளது என்று பார்வையிட சென்றுள்ளதால் அவர் யாருக்கும் அறிவிப்பு கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. மேலும், வா.சா.4ன் சாட்சியத்தின் மூலம் தாவா சொத்தின்அனுபவம் யாரிடம் உள்ளது என உறுதி செய்யவில்லை. தாவா சொத்தின் நிலை என்ன என்பதுதான் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் பிரதிவாதிகள் தரப்பு வாதுரை ஏற்புடையதல்ல என நிராகரிக்கப்பட்டு, வாதிகள் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் அவர்களுக்கு ஆதரவாக கிடைக்கக்கூடியது என எழுவினா1க்கு தீர்வு காணப்படுகிறது.

WEB COPY

24. <u>**எழுவினா 2 :**</u>

எழுவினா 1க்கு காணப்பட்ட தீர்வின் அடிப்படையிலும், Public Purpose (பொது பயன்பாடு) என்று தெரிந்தே தாவா சொத்தினை சொத்துரிமை மாற்றம் பெற்று பொது சொத்தினை அபகரிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பிரதிவாதிகள் செயல்பட்டுள்ளதால், வாதிகளின் வழக்கு செலவுத்தொகையை கொடுக்கவேண்டும் என எழுவினா 2க்கு தீர்வு காணப்படுகிறது.

**25. முடிவில், வாதிகளின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, நாச்சிமுத்து நகர் குடியிருப்பு வாசிகளின் பொதுஅனுபவத்தில் உள்ள பி.வா.சா.ஆ-35ல் குறிப்பிடப்பட்டுள்ள "Public Purpose" இடத்தில் பிரதிவாதிகளும், அவர்களின் ஆட்களும் ஆக்கரமித்து எந்தவிதமான கட்டுமானத்தையோ அல்லது இடையூறோ செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி மேற்கண்டவாறு தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது. பி.வா.சா.ஆ-35ன் மாதிரி வரைபடத்தை தயார் செய்து தீர்ப்பாணையின் ஒரு அங்கமாக இணைக்க உத்திரவிடப்படுகிறது.**

WEB COPY

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எடுக்கப்பட்டு, விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று (13.09.2017 ) திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

<u>**பின் இணைப்பு :**</u>

<u>**வாதிகள் தரப்பு சாட்சிகள் :**</u>

வா.சா.1 திரு.ரபி அகமது (2ம்வாதி )

வா.சா.2 திரு.ராஜேந்திரன் (மூன்றாம் தரப்பினர்)

வா.சா.3 திரு.நீலராஜ் (மயிலாடுதுறை நகராட்சி நகர சார் ஆய்வாளர்)

வா.சா.4 திரு.குமரேசன் ( வரைவாளர் நிலை 3, தஞ்சாவூர் நகர் ஊரமைப்புத் துறை மண்டல அலுவலம். )

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 17.10.2013 | தாவா சொத்திற்கான வில்லங்கச் சான்று. (01.01.1987 முதல் 16.10.2013 வரை)(அசல்) |
| வா.சா.ஆ.2 | 02.11.1990 | ராஜேந்திரன் என்பவருக்கு பாலசுப்பிரமணியனின் ஜெனரல் பவர் ஏஜண்டு பெற்ற நாச்சிமுத்து முதலியார் பவர் ஏஜண்டு என்ற முறையிலும் மற்றும் நாச்சிமுத்து முதலியாரின்மகன் சந்திரசேகரன் ஆகிய இருவரும் சேர்ந்து எழுதிக் கொடுத்த கிரய பத்திரம். ( பதிவு செய்யப்பட்டதன் உண்மை நகல் ) |
| வா.சா.ஆ.3 | 01.07.2005 | டாக்டர் சிவக்குமாருக்கு டாக்டர் கண்ணன் எழுதிக் கொடுத்த கிரய பத்திரம். (பதிவு செய்யப்பட்டதன் உண்மை நகல்) |
| வா.சா.ஆ.4 | 23.08.2016 | தஞ்சாவூர் மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள் பாத்திமா ஜின்னா என்பவருக்கு அனுப்பிய கடிதம் லேவுட்-உடன் கூடியது. ( அசல்) |
| வா.சா.ஆ.5 | 05.12.2013 | தாவா சொத்திற்கான வில்லங்கச் சான்று. (01.01.1987 முதல் 04.12.2013 வரை)(அசல்) |
| வா.சா.ஆ.6 | 21.10.2013 | வாதிகள் நல சங்கத்திற்கு மயிலாடுதுறை எண்.1 இணை சார்பதிவாளர் கொடுத்த பற்று சீட்டு. (அசல்) |
| வா.சா.ஆ.7 | 21.10.2013 | வாதிகள் நல சங்கதிற்கு மயிலாடுதுறை பதிவாளர் கொடுத்த பதிவுச் சான்று. ( அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல்) |
| வா.சா.ஆ.8 | 04.07.2016 | மயிலாடுதுறை எண்1 இணை சார்பதிவாளாரால் வாதிகள் நல சங்கத்திற்கு கொடுக்கப்பட்ட கட்டண ரசீது. (அசல்) |

WEB COPY

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.9 | 23.03.2016 | 1ம்வாதிக்கு நாகப்பட்டிணம் மாவட்ட குற்றப்பிரிவு துணை காவல் கண்காணிப்பாளரால் அனுப்பப்பட்ட காவல்துறை அழைப்பாணை. (அசல்) |
| வா.சா.ஆ.10வரிசை | 25.08.2014 | 10ம்பிரதிவாதி தனது வழக்கறிஞர் மூலம் முஹம்மது சுலைமான், இம்தியாஸ்காசிம், அக்பர்அலி ஆகியோர்களுக்கு அனுப்பிய அறிவிப்பு. (அசல்) |
| வா.சா.ஆ.11 | 13.09.2014 | வா.சா.ஆ-10 அறிவிப்புக்கு முஹம்மது சுலைமான், இம்தியாஸ்காசிம், அக்பர்அலி மற்றும் அவர்களது மாமனாரும் கொடுத்த பதில் அறிவிப்பு. (அலுவலக நகல்) |
| வா.சா.ஆ.12 | --- | கோமல் அன்பரசன் என்பவர் வெளியிட்டுள்ள "மாயூர யுத்தம்" என்ற புத்தகத்தின் 34ம் பக்கம். (முழு புத்தகத்துடன் உள்ளது) (அசல்) |
| வா.சா.ஆ.13 | 30.10.2013 | தினகரன் நாளிதழில் வெளியான "மயிலாடுதுறையில் புதிய பஸ்நிலைய பணி விரைவில் தொடங்கும் - அரசுக்கு அறிக்கை நகர்மன்ற கூட்டத்தில் தகவல் " என்ற குறிப்பு. (அசல்) |
| வா.சா.ஆ.14 | 28.01.2016 | மயிலாடுதுறை நகராட்சி அலுவலகத்திலிருந்து நாச்சிமுத்துநகர் முருகன் என்பவருக்கு அனுப்பப்பட்ட கடிதம். (அசல்) |

WEB COPY

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :</u>**

பி.வா.சா.1 திரு.பழனிவேலு (4ம்பிரதிவாதி)

பி.வா.சா.2 திரு.அசோக்குமார் ( மயிலாடுதுறை இணை1 சார்பதிவாளர்)

பி.வா.சா.3 திருமதி.சசிகலா ( மாவட்ட பதிவாளர், மயிலாடுதுறை.)

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 10.07.1961 | நாச்சிமுத்து முதலியார் என்பவருக்கு சொக்கலிங்கம் செட்டியார் வகையறா எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம். (அசல் பதிவு செய்யப்பட்டது) |
| பி.வா.சா.ஆ.2 | 14.06.2005 | திருச்சிராப்பள்ளி கன்டோன்மெண்ட் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், நாச்சிமுத்து முதலியார் மகன் ஜெயசங்கருக்கு அனுப்பிய கடிதம். (அசல்) |

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.3 | 16.05. ---- | ஜெயசங்கா் என்பவா் திருச்சிராப்பள்ளி திருச்சி துணை நகர ஊரமைப்பு இயக்குநா் அவா்களுக்கு அனுப்பிய கடிதம். (நகல்) |
| பி.வா.சா.ஆ.4 | 29.12.2010 | விஜயசரவணன் என்பவருக்கு வீட்டு மற்றும் ஊரக வளா்ச்சித்துறையில் இருந்து அனுப்பிய தகவல் கடிதம் மற்றும் அதன் தொடா்புடைய இரண்டு கடிதங்கள். (அசல்) |
| பி.வா.சா.ஆ.5 | 18.10.2004 | பழனி அம்மாள் என்பவருக்கு பாலசுப்ரமணியன் என்பவா் எழுதிவைத்த தான செட்டில்மெண்ட் பத்திரம். (அசல் பதிவு செய்யப்பட்டது) |
| பி.வா.சா.ஆ.6 | 21.10.2004 | சந்திரசேகரன் என்பவருக்கு பழனியம்மாள் என்பவா் எழுதிவைத்த தான செட்டில்மெண்ட் பத்திரம். (அசல் பதிவு செய்யப்பட்டது) |
| பி.வா.சா.ஆ.7 | 21.10.2004 | பாலசுப்ரமணியன் என்பவருக்கு பழனி அம்மாள் என்பவா் எழுதிவைத்த தான செட்டில்மெண்ட் பத்திரம். (அசல் பதிவு செய்யப்பட்டது) |
| பி.வா.சா.ஆ.8 | 21.10.2004 | ஜெயசங்கா் என்பவருக்கு பழனி அம்மாள் என்பவா் எழுதிவைத்த தான செட்டில்மெண்ட் பத்திரம். (அசல் பதிவு செய்யப்பட்டது) |
| பி.வா.சா.ஆ.9 | 21.10.2004 | கிருஷ்ணமூா்த்தி என்பவருக்கு பழனி அம்மாள் என்பவா் எழுதிவைத்த தான செட்டில்மெண்ட் பத்திரம். (அசல் பதிவு செய்யப்பட்டது) |
| பி.வா.சா.ஆ.10 | 30.04.2004 | நாச்சிமுத்து என்பவரின் இறப்பு சான்றிதழ். (சான்றிட்ட நகல்) |
| பி.வா.சா.ஆ.11 | 05.10.2007 | உத்தமன் என்பவருக்கு மாலதி என்கிற பாக்கியலெட்சுமி என்பவா் எழுதிக்கொடுத்த ஜெனரல் பவா் பத்திரம். (அசல் பதிவு செய்யப்பட்டது) |
| பி.வா.சா.ஆ.12 | 12.12.2007 | உத்தமன் என்பவருக்கு கஸ்தூரி (எ) கிருஷ்ணவேணி, மங்களாம்பிகை (எ) மங்களம் எழுதிக்கொடுத்த ஜெனரல் பவா் பத்திரம். (அசல் பதிவு செய்யப்பட்டது) |

WEB COPY

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.13 | 20.04.2009 | சந்திரா மற்றும் நால்வருக்கும் பழனியம்மாள் மற்றும் ஏழு நபர்கள் சேர்ந்து எழுதிக் கொடுத்த கிரய பத்திரம். (அசல் பதிவு செய்யப்பட்டது) |
| பி.வா.சா.ஆ.14 | 13.02.2013 | ஹேமமாலினி என்பவருக்கு சந்திரசேகரன் என்பவர் எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டு தொகை வரவு ரசீது.(அசல் பதிவு செய்யப்பட்டது) |
| பி.வா.சா.ஆ.15 | 13.02.2013 | சந்திரா என்பவருக்கு பழனியம்மாள் என்பவர் எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டு தொகை வரவு ரசீது.(அசல் பதிவு செய்யப்பட்டது) |
| பி.வா.சா.ஆ.16 | 05.09.2013 | முத்துக்குமார் என்பவருக்கு கிருஷ்ணமூர்த்தி என்பவர் எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டு தொகை வரவு ரசீது.(அசல் பதிவு செய்யப்பட்டது) |
| பி.வா.சா.ஆ.17 | 27.12.2012 | வில்லங்கச் சான்று. (01.01.1987 முதல் 23.12.2012 வரை)(அசல்) |
| பி.வா.சா.ஆ.18 | 04.11.2013 | வில்லங்கச் சான்று. (01.01.2012 முதல் 03.11.2013 வரை)(அசல்) |
| பி.வா.சா.ஆ.19 | 04.11.2013 | வில்லங்கச் சான்று. (01.01.2012 முதல் 03.11.2013 வரை)(அசல்) |
| பி.வா.சா.ஆ.20 | 07.03.2014 | வில்லங்கச் சான்று. (01.01.1987 முதல் 16.10.2013 வரை)(அசல்) |
| பி.வா.சா.ஆ.21வரிசை | --- | தாவா சொத்திற்கான சொத்துவரி ரசீதுகள் (6எண்ணிக்கைகள்) மற்றும் வேலி அமைத்ததற்கான ரசீது (1எண்ணிக்கை) |
| பி.வா.சா.ஆ.22 | 20.03.2015 | மயிலாடுதுறை நகரநிலவரித்திட்ட தனி வட்டாட்சியரின்செயல்முறைகள். (அசல்) |
| பி.வா.சா.ஆ.23 | 24.10.2016 | தாவா சொத்திற்கான நகரளவு புல வரைபடம். (உண்மை நகல்) |
| பி.வா.சா.ஆ.24 | 20.03.2015 | சுப்பிரமணியன், பழனிவேலு, ரெங்கநாயகி, சுரேந்தர் பாபு பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா. (பட்டா எண்.74) (அசல்) |

WEB COPY

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.25 | 20.03.2015 | சுப்பிரமணியன், பழனிவேலு, ரெங்கநாயகி, சுரேந்தர் பாபு பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா. (பட்டா எண்.74) (அசல்) |
| பி.வா.சா.ஆ.26 | 20.03.2015 | சுப்பிரமணியன், பழனிவேலு, ரெங்கநாயகி, சுரேந்தர் பாபு பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா. (பட்டா எண்.74) (அசல்) |
| பி.வா.சா.ஆ.27 | 20.03.2015 | சுப்பிரமணியன், பழனிவேலு, ரெங்கநாயகி, சுரேந்தர் பாபு பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா. (பட்டா எண்.74) (அசல்) |
| பி.வா.சா.ஆ.28 | 20.03.2015 | சுப்பிரமணியன், சுரேந்தர் பாபு பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா. (பட்டா எண்.72) (அசல்) |
| பி.வா.சா.ஆ.29 | 20.03.2015 | சுப்பிரமணியன், சுரேந்தர் பாபு பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா. (பட்டா எண்.72) (அசல்) |
| பி.வா.சா.ஆ.30 | 20.03.2015 | பழனிவேலு, ரெங்கநாயகி பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா. (பட்டா எண்.73) (அசல்) |
| பி.வா.சா.ஆ.31 | 20.03.2015 | பழனிவேலு, ரெங்கநாயகி பெயரில் உள்ள மனைவரி தோராய பட்டா. (பட்டா எண்.73) (அசல்) |
| பி.வா.சா.ஆ.32 | 27.03.2013 | சந்திரா வகையறா மற்றும் பழனிவேலு வகையறா செய்து கொண்ட சொத்துக்கள் பரிவர்த்தனை ஆவணம்.(அசல் பதிவு செய்யப்பட்டது) |
| பி.வா.சா.ஆ.33 | 27.03.2013 | சுப்பிரமணியன் மற்றும் சுரேந்தர் பாபுவிற்கு சந்திரா வகையறா எழுதிக் கொடுத்த கிரய பத்திரம். (அசல் பதிவு செய்யப்பட்டது) |
| பி.வா.சா.ஆ34 | ---- | தாவா சொத்திற்கான சொத்துவரி ரசீதுகள் (2எண்ணிக்கை), சொத்து வரிக்கான கேட்பு அறிவிப்பு (1எண்ணிக்கை) (அசல்) |

WEB COPY

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.35 | 06.02.1982 | மாயூரம் நகராட்சி ஆணையரால் வழங்கப்பட்ட மனை பிரிவு திட்ட அனுமதி வரைபடம். (L.P.No.77/81 உடையது) |

**சாட்சி சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| சா.சா.ஆ.1 | --- | தாவா இடத்தை ஸ்தல ஆய்வு செய்தது குறித்த நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோப்புகள் அடங்கியது. (8தோள்களை கொண்டது) (அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல்) |
| சா.சா.ஆ.2 | --- | நாச்சிமுத்து முதலியார் பெயரில் உள்ள வில்லங்கசான்று மனு,சொத்துவிபரம் மற்றும் 17.10.2013 தேதியிட்ட 01.01.1987 முதல் 16.10.2013 வரையுள்ள வில்லங்கச்சான்று. ( அசலுடன் ஒப்பிடப்பட்ட உண்மை நகல்) |
| சா.சா.ஆ.3 | 07.03.2014 | பரதன் என்பவர் பெயரில் உள்ள வில்லங்கசான்று மனு , சொத்துவிபரங்கள். ( அசலுடன் ஒப்பிடப்பட்ட உண்மை நகல்) |
| சா.சா.ஆ.4 | 15.10.2014 | நாச்சிமுத்து நகர் குடியிருப்போர் நல சங்கம் வரவு செலவு கணக்கு 21.10.2013 முதல் 31.3.2014 வரை. ( அசலுடன் ஒப்பிடப்பட்ட உண்மை நகல்) |
| சா.சா.ஆ.5 | 07.06.2017 | நாச்சிமுத்து நகர் குடியிருப்போர் நல சங்கம் பெயரில் உள்ள படிவம் 7. ( உறுப்பினர் நீக்கம் பற்றிய விபரம்) ( அசலுடன் ஒப்பிடப்பட்ட உண்மை நகல்) |
| சா.சா.ஆ.6 | 07.06.2017 | நாச்சிமுத்து நகர் குடியிருப்போர் நல சங்கம் வரவு செலவு கணக்கு 01.04.2015 முதல் 31.3.2016 வரை. ( அசலுடன் ஒப்பிடப்பட்ட உண்மை நகல்) |
| சா.சா.ஆ.7 | 07.06.2017 | நாச்சிமுத்து நகர் குடியிருப்போர் நல சங்கம் பெயரில் உள்ள படிவம் 7. ( நிர்வாக குழு மறு நியமனம் பற்றிய விபரம்) ( அசலுடன் ஒப்பிடப்பட்ட உண்மை நகல்) |

WEB COPY

மு.மா.உ.நீ.

WEB COPY

செவ்வை/வரைவு தீர்ப்புரை :

அ.வ.எண்.265/2013

நாள் : 13.09.2017

WEB COPY